தேவனுக்குப் பிரியமானவர்

(தாவீது)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தேவனுக்குப் பிரியமானவர்

தாவீதின் தலையாய குணங்கள்

வேர்டு ஆஃப் கிரைஸ்ட்
சென்னை

தேவனுக்குப் பிரியமானவர்

(தாவீதின் தலையாய குணங்கள்)

Editor : D. ILANGO, NEYVELI.

All rights reserved. Written permission must be secured from the publisher to use or reproduce any part of this book, except for brief quotation in critical reviews or articles.

First Edition - 2015

ISBN : 978-93-84328-30-6

Published by:
WORD OF CHRIST MINISTRIES
No. 100/3, Nirmala Apartments
Medavakkam Tank Road, Kellys
Chennai 600 010 Tamil Nadu, India
Phone: 044 - 2661 3242 / 4264 0111
E-Mail ID: info@wordofchrist.org
Website: www.wordofchrist.org
Printed at Chennai, India.

Price: Rs 50.00

புத்தகம் பிறந்த கதை

எங்கள் மருத்துவமனையில் கிறிஸ்துமஸ் நாட்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம். கடந்த இரு வருடங்களாக வேதாகம வினாடிவினா போட்டி உற்சாகமாகவும் அதிக எதிர் பார்ப்புகளுடனும் நடைபெற்றுவருகிறது. 2012ஆம் ஆண்டில் தாவீது இராஜாவின் வாழ்க்கையை மையமாக வைத்து வினாடிவினா நடை பெற்றது. மேலும் மருத்துவமனை ஊழியர்களும், செவிலிய மாணவி களும் தாவீதின் பண்புகளில் அவர்களுக்குப் பிடித்த பண்புகளை எழுத ஊக்குவிக்கப்பட்டனர். அதில் எழுதப்பட்ட சில கட்டுரைகளை ஒரு புத்தகமாக வெளியிட தேவன் உதவி செய்துள்ளார்.

இஸ்ரவேலின் இராஜாக்களில் தாவீது மிகவும் சிறந்தவர். தாவீது என்றால் "பிரியமானவர்" எனப்பொருள்! பெயருக்கேற்றபடி அவரும் தேவனுக்குப் பிரியமானவராக வாழ்ந்தார். அவருடைய வாழ்க்கையையும், குணங்களையும், தோல்விகளையும் விவரிக்கும் இப்புத்தகம் தேவனுக்குப் பிரியமாய் வாழ நமக்கு உதவிசெய்யும் என்பது என் நம்பிக்கை.

கட்டுரைகளை புத்தகவடிவில் கொண்டுவர கடினமாக உழைத்த டாக்டர் அலெக்சாண்டர் அவர்களையும், கட்டுரை எழுதியவர்களை யும் தேவன் அதிகமாக ஆசீர்வதிப்பாராக! இதில் எழுதப்பட்ட காரியங்களைத் தியானித்து வாழ்க்கையில் நடைமுறைப் படுத்துவீர்கள் என நம்புகிறேன். இதைப் படிக்கிற நீங்கள் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும் என்பதே என் விருப்பம்! (2 பேது.3:18).

டாக்டர் தாமஸ் பிலிப்பு,
மருத்துவக் கண்காணிப்பாளர்,
கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனை,
ஒட்டன்சத்திரம்.

அணிந்துரை

இப்புத்தகம் அளவில் சிறிதாயினும் முயற்சியில் புதுமையானது; கருத்தில் ஆழமானது. தாவீதை வித்தியாசமான கண்ணோட்டத்தில் வடிவமைத்துள்ள எழுத்தாளர்களை நர்ன் பாராட்டுகிறேன். இக்கூட்டு முயற்சி ஓர் அரிய படைப்பாகும்.

தனி தியானத்திற்கும், ஆராய்ச்சிக்கும், குழு ஆராய்ச்சிக்கும், பிரசங்கத்திற்கும், போதனைக்கும் இப்புத்தகம் ஒரு சிறந்த வழிகாட்டி. இது ஒரு கருத்துக்களஞ்சியம் என்று சொன்னால் மிகையாகாது. இதை மெருகேற்றிக் கொடுத்த சகோதரர் D.இளங்கோவிற்கும், ஒருங்கிணைத்த என் நண்பர் Dr.அலெக்சாண்டருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

மேலோட்டமாக இதை ஒரு முறை வாசிப்பதைவிட, பலமுறை படித்து பயன்பெற நான் வேண்டுகிறேன். இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவர்களாக மாற வேண்டுமென்பதே எங்கள் விண்ணப்பம்.

கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

Dr. செல்வின் D எபிநேசர்
விசுவாசிகளின் ஐக்கிய சபை,
ஒட்டன்சத்திரம்.

தாவீது - ஓர் அறிமுகம்

கிறிஸ்தவர்களுக்கு தாவீது பற்றி ஓர் அறிமுகம் தேவையில்லை தான்; ஆனால் தாவீது பற்றிய பல முக்கிய விஷயங்கள் நமக்குத் தெரியாமல் இருப்பதால் இச்சிறிய முன்னுரை!

பரிசுத்த வேதாகமத்தில் அதிகமுறை எழுதப்பட்ட பெயர் தாவீது. சுமார் 1050 முறை இவருடைய பெயர் எழுதப்பட்டுள்ளது. தாவீதின் பெயர் ரூத் புத்தகத்திலிருந்து (4:17) வெளிப்படுத்தல் புத்தகம் வரை (22:16) உள்ளது. வேதத்தின் 66 புத்தகங்களில் 28இல் இவர் பெயர் உள்ளது. முக்கியமாக 4 நற்செய்தி நூல்களிலும் இவர் பெயர் எழுதப்பட்டுள்ளது. விசேஷமாக புதிய ஏற்பாட்டின் முதல் வசனத்திலேயே இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் ‘தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்து’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு முக்கியமானவரைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம் அன்றோ ?

நாம் ஆராதனையில் பயன்படுத்தும் சங்கீதங்கள், சிறுவர் மனப்பாடம் செய்யும் சங்கீதங்கள் பலவும் தாவீது எழுதியதே! சங்கீதங்கள் 3–9, 11–32, 34–41, 51–65, 68–70, 86, 101, 103, 108–110, 122, 124, 131, 133, 138–145 என சுமார் 75 சங்கீதங்கள் இவருடைய படைப்புதான். இந்த இசைக் கலைஞரை, ஆராதனை வீரரை, ஜெபத்தலைவரைப் பற்றி நாம் படிக்க வேண்டாமா ?

தாவீதைப் பற்றி 1000 வருடம் கழித்தும் பவுல் கூறுகிறார்: ‘தாவீது தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமானவர்’, ‘தேவனுடைய சித்தத்தின் படி நடந்தவர்’ (அப்13:22,36). தேவனுக்குப் பிரியமாய் நடந்த, தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவரைப் பற்றிப் படித்து, அதின்படி நடக்கும்போது நாமும் தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாய் மாறலாம்.

இவரைப்பற்றி 1 சாமுவேல் 16ஆம் அதிகாரத்திலிருந்து 1 இராஜாக்கள் 2ஆம் அதிகாரம் வரை 56 அதிகாரங்களில் எழுதப்பட்டுள்ளது. இதில்

இவருடைய பிறப்பு, குடும்பப் பின்னணி, தேவன் தெரிந்தவிதம், இராஜாவாகுதல், இவருக்கு வந்த சோதனைகள், எதிர்ப்புகள், இவருடைய வெற்றிகள் என இவருடைய வரலாறு ஒளிவுமறைவின்றி கூறப்பட்டுள்ளது. அதில் இவருடைய பாவம் குறித்தும், பரிசுத்தம் குறித்தும் எழுதப்பட்டுள்ளது.

திரும்பவும் தாவீதைப் பற்றி 1 நாளாகமம் 10ஆம் அதிகாரத்திலிருந்து 29ஆம் அதிகாரம் வரை 20 அதிகாரங்களில் வாசிக்கிறோம். இது தாவீது இறந்து சுமார் 500 வருடங்கள் கழித்து எழுதப்பட்ட புத்தகம். இதில் தாவீதின் நற்பண்புகளும், அவர் எப்படி தேவஆலயத்தைக் கட்ட முயற்சி செய்தார் எனவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. இந்த 20 அதிகாரங்களைப் படித்தாலே நாம் தாவீதைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளலாம். ஒருவர் இறந்து 1000 வருடங்கள் கழித்தும் தேவன் அவரைப்பற்றி வேதத்தில் எழுதுவாரானால், தேவன் அவரை எவ்வளவு நேசிக்கிறார் என அறியலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து, அடிக்கடி தாவீதின் குமாரன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளார் (மத்தேயு 1:1, 9:7, 12:23, 15:22, 20:30,31,21, 9:15, 24:42,43,45, மாற்கு 10:47,48). நாம் இயேசுகிறிஸ்துவைப் பற்றித் தெரிந்து கொள்ள அவருடைய முற்பிதா தாவீதைப்பற்றித் தெரிந்துகொள்வது முக்கியமல்லவா ? கடைசிப் புத்தகமும் தாவீதைப்பற்றிக் கூறுகிறது. இங்கு இயேசுகிறிஸ்துவை 'தாவீதின் வேர்' (5:5, 22:16) எனவும், 'தாவீதின் திறவுகோலை உடையவர்' எனவும் (3:7) வேதம் கூறுகிறது.

எனவே பரலோகம் போகிற நம்முடைய தலையாய கடமை தாவீதைப் பற்றி படிப்பதாகும். இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள தாவீதின் முக்கிய 14 பண்புகளைப் படிப்போம், அதன்படி நடப்போம்!

உள்ளே

புத்தகம் பிறந்த கதை III

அணிந்துரை V

தாவீது – ஓர் அறிமுகம் VII

1. தாவீதின் இருதயம் 01
2. தாவீதின் மன்னிக்கும் குணம் 07
3. தாவீதின் ஆதரவு அளிக்கும் பண்பு 13
4. தாவீதின் ஜெபங்கள் 17
5. தாவீது தேவனை சார்ந்து கொண்டார் 23
6. தாவீதின் விசுவாசமும், நம்பிக்கையும் 29
7. தாவீதின் பாவமும், பாவ மன்னிப்பும் 35
8. தாவீதின் ஆலய அர்ப்பணிப்பு 41
9. தாவீது – ஓர் தீர்க்கதரிசி 45
10. தாவீதின் நன்றி மறவாமை 51
11. தாவீதின் நட்பு 55
12. தாவீதின் வாழ்க்கையில் தேவ ஆளுகை 59
13. தாவீதின் தேவ அறிவு 67
14. தாவீதின் பிள்ளை வளர்ப்பு 75

தாவீதைப் பற்றி மேலும் அறிய... 81

1

தாவீதின் இருதயம்

D.அலெக்ஸாண்டர்

தாவீதை "என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளை யெல்லாம் அவன் செய்வான்" (அப் 13:22) என தேவன் சாட்சி தருகிறார். தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவரான தாவீதின் இருதயம் எப்படி இருந்தது எனப் பார்ப்பது நம் ஆன்மிக வாழ்க்கைக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

"கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன். நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" (சங் 27:4) என தாவீதின் இதயம் ஏங்கியது. தாவீதின் இருதயத்தில் இருந்த நான்கு காரியங்களை இவ்வசனத்திலிருந்து பார்ப்போம் :

ஒன்றே ஒன்று

தாவீதின் இதயத்துடிப்பு ஒன்றே ஒன்றுதான்! வேறு எக்காரியத்திற்கும் அவர் இடம் கொடுக்கவில்லை. அந்த ஒரு காரியத்தை மட்டும்தான் அவர் தேவனிடத்தில் கேட்டார்.

'இரு முயலைப் பிடிக்க முயற்சி செய்தால் ஒரு முயலையும் பிடிக்க முடியாது' என்பது பழமொழி. இரு காரியங்களில் நாம் நம்மை ஈடுபடுத்தும் போது, இரு காரியங்களிலும் வெற்றி பெறுவது முடியாத காரியம். எனவே தான் இயேசுகிறிஸ்து "இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக்கூடாது" (மத்.6:24) எனக் கூறினார். இதை அறிந்த தாவீது, தான் ராஜாவாக இருந்தாலும், வேலை அதிகம் இருந்தாலும், எதிரிகள் சூழ இருந்தாலும் ஒன்றே ஒன்றுதான் தன் தேவை என அறிந்திருந்தார்.

நாமும் ஒரே காரியத்தை நாடுவோம்.

அதையே நாடு

தாவீது தேவனிடத்தில் கேட்டது மட்டுமல்ல, அதையே தன் வாழ்க்கையில்

நாடினார். இதைத்தான் இயேசுகிறிஸ்து, "தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்" எனக் கூறினார் (மத்.7:8). ஆங்கில வேதாகமம் இதைப் பல வார்த்தைகளில் வெளிப்படுத்துகிறது:

- தாவீது அதையே நோக்கிப்பார்த்தார்.
- தாவீது அதையே தேடினார்.
- தாவீதிற்கு அதின்மேல் மட்டும் தான் பிரியம்.
- தாவீது அதையே தேவனிடத்தில் மன்றாடினார்.
- தாவீது அதைமட்டுமே முக்கியமாகக் கொண்டார்.

அவர் தேவனைத் தேடியதை அவருடைய வாழ்க்கையிலிருந்து நாம் காணலாம். பெலிஸ்தர் போரிட வந்தபோது அவர் தேவனிடத்தில் விசாரித்து, தேவன் 'சரி' என சொன்ன பிறகு, திரும்பவும் கேட்டு (1 சாமு. 23:2,4) அவர் சொல்வதையே நாடி, தேடி அதையே செய்தார்.

அதுமட்டுமல்ல, அமலேக்கியர் அவருடைய மனைவியையும், மக்களையும் பிடித்துக்கொண்டு போனபோதுகூட தேவனிடத்தில் கேட்டு அதன்படி செய்தார் (1 சாமு.30:8). சவுல் இறந்தபின், யூதாவின் பட்டணங்களில் தங்கியிருக்கவும் (2 சாமு.2:1) தாவீது தேவனுடைய அனுமதியைக் கேட்டார்.

நம் வாழ்விலும் நாம் ஒவ்வொரு காரியத்திலும் தேவனையே நாடி, அவரையே தேட வேண்டும். தாவீதின் வாழ்க்கை நமக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கட்டும்!

அவருடைய நோக்கம் - தேவ சமூகம்

தாவீது எக்காரியத்தை தேவனிடத்தில் கேட்டார், எதை நாடினார் என அறிந்தால் நாம் ஆச்சரியப்படுவோம். ஒரு ராஜாவாக, தன் பகைவர்களின் தலையையோ, பணத்தையோ, அதிகாரத்தையோ அவர் கேட்கவில்லை. தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பதே அவருடைய ஒரே நோக்கம். தாவீதின் காலத்தில் தேவ ஆலயம் இல்லை. அப்படியானால் தாவீது 'தேவனுடைய ஆலயத்தில் தங்கியிருப்பது' என எதைக் கூறுகிறார்? தேவனுடைய சமூகத்தில் இருப்பதையே! தேவ பிரசன்னத்தில் இருப்பதையே! தேவனுடனே இருப்பதையே!

சிறுவனாய் இருந்தபோதும் அவருடைய நோக்கம் தேவசமூகம்தான்! எனவேதான் மேய்ப்பனாக இருந்தபோது 'தேவன் என் மேய்ப்பராய் இருக்கிறார். அவர் என்னோடு இருக்கிறார். நான் கர்த்தருடைய வீட்டில்

நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்' (சங்.23) எனப் பாடமுடிந்தது. இளவயதில் மட்டுமல்ல, முதிர்வயதிலும் தேவனுடைய ஆலயமே அவருடைய நினைவாய், எண்ணமாய், வாஞ்சையாய் இருந்தது. எனவேதான் அவர் தேவ ஆலயத்திற்குப் பொன்னையும், வெள்ளியையும் சேகரித்து தன் மகன் சாலொமோனிடமும், சபையாரிடமும் கொடுத்தார் (1 நாளா.29:3).

அது மட்டுமல்ல, எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் தேவ சமூகத்தை நாடினார். கோலியாத்து எதிர்த்து வந்தபோதும், பத்சேபாளுடன் பாவம் செய்து மனந்திரும்பும்போதும் (சங்.51), தன் மகன் தன்னைக் கொல்லவந்த போதும் தேவ சமூகமே அவருடைய ஆறுதல்! இன்பமோ, துன்பமோ, கவலையோ, கண்ணீரோ தேவ பிரசன்னமே அவருடைய பெலன். எனவே தான் அவர் தைரியமாக '**நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்**' எனக் கூறமுடிந்தது.

நாமும் 'என் ஜீவனுள்ள நாளெல்லாம், நான் உயிரோடு இருக்கும் வரை தேவ சமூகத்தையே, அவர் பிரசன்னத்தையே எல்லா நாட்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும், எல்லா நேரத்திலும் தேடுவேன், நாடுவேன், இருப்பேன்' என உறுதி எடுப்பது நம் வாழ்விற்குப் பயனுள்ளதாய் இருக்கும்.

தேவ சமூகத்தில் என்ன செய்தார்?

தேவ சமூகத்தில் என்ன செய்யவேண்டும்? எப்படி இருக்கவேண்டும் என நமக்கு அதிகம் தெரியாது. எனவே அதிக நேரம் அவர் சமூகத்தில் நாம் இருக்க முடிவதில்லை. தாவீது என்ன செய்தார் என நாம் அறிந்து கொண்டால் நாமும் அவரைப்போல அதிக நேரம் தேவ சமூகத்தில் இருக்கலாம்.

தாவீது சொல்கிறார்: நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும் படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும் அவர் இரு காரியங்களைச் செய்தார். ஆங்கில வேதாகமம் இதைப் பல வார்த்தைகளில் கூறுகிறது:

- தேவ சமூகத்தை அனுபவிக்கவும், தியானம் பண்ணவும்
- தேவனைப்பார்க்கவும், அவரைத் தேடவும்
- தேவனை ருசிக்கவும், அவரது வழிநடத்துதலைத் தேடவும்
- தேவ அதிசயங்களைப் பார்க்கவும், அவருடைய பாதத்தில் அமர்ந்து படிக்கவும்
- அவரை அனுபவிக்கவும், அவரை ஆராதிக்கவும்

- அவருடைய சமூகத்தில் நேரம் செலவழிக்கவும், ஜெபிக்கவும்

தாவீது தேவசமூகத்தை விரும்பி, அனுபவித்தார். தேவ பாதத்தில் உட்கார்ந்து அவருடைய வழிநடத்துதலைப் பெற்றார். அவரைப் பற்றி ஆராய்ந்தார், படித்தார், தியானித்தார், ஆராதித்தார். இதுவே நம்முடைய தேவையும்!

அவர் எப்படி தேவனை ஆராதித்தார் என்பதற்கு அவர் எழுதிய சங்கீதங்களே நமக்கு சாட்சி! அவர் எப்படி தேவ சமூகத்தில் தன் இருதயத்தை ஊற்றினார் என்பதற்கு அவர் ஜெபங்களே நமக்கு சாட்சி. அவருடைய சங்கீதங்களில் அழுகை உள்ளது, ஜெபம் உள்ளது, தேவ குணாதிசயங்கள் உள்ளது, பாவ மன்னிப்பு உள்ளது.

தாவீது தேவ சமூகத்தில் செய்த காரியங்களை இதிலிருந்து நாம் அறிகிறோம். நாமும் இதே போல் தேவ சமூகத்தில் நம் இருதயத்தை ஊற்றி விண்ணப்பிப்போம், ஜெபிப்போம், பாவ அறிக்கை செய்வோம், ஆராதிப்போம், தேவ அறிவைப் பெறுவோம்.

தேவ பிள்ளைகளாகிய நாமும் தாவீதைப் போல நம் இதயத்தை ஒருமுகப்படுத்தி ஒரே ஒரு காரியத்தைச் செய்ய தேவனைக்கேட்போம். அத்துடன் அதையே நாடுவோம். அந்த ஒரு காரியம் தேவ சமூகத்தில் இருப்பதிலேயே இருக்கட்டும். தேவ சமூகத்தில் நாம் தேவனை நோக்கிப் பார்ப்போம், தேவனுடன் உறவாடுவோம், தேவ ஆலோசனையைப் பெறுவோம், தேவனை ஆராதிப்போம்.

அப்போது, 'தேவனுடைய இருதயத்திற்குப் பிடித்தமானவன்' என நம்மைப்பற்றி தேவனும், வருங்காலச் சந்ததியும் சொல்லும். அதுமட்டுமின்றி நாம் தேவ சித்தத்தை மட்டும் செய்தோம் என வரலாறு சாட்சி கூறும்.

நம் வாழ்க்கையும், தாவீதின் வாழ்க்கையைப்போலப் பல சந்ததிகளுக்கு, பல நாட்டு மக்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்கட்டும், ஆமென்!

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. உங்கள் இருதயத்தின் ஒரே வாஞ்சை என்ன ? அந்த வாஞ்சையை நீங்கள் எப்படி நிறைவேற்றுகிறீர்கள் ?

ஒரிசாவில் பணிபுரிந்த Dr.அலெக்ஸாண்டர் – ஹேனா தம்பதியர் தற்போது தேவனுடைய ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர்.

சங்கீதம் 27

(தாவீதின் சங்கீதம்.)

1 கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?

2 என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க, என்னை நெருக்குகையில் அவர்களே இடறிவிழுந்தார்கள்.

3 எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும், என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும், இதிலே நான் நம்பிக்கையாயிருப்பேன்.

4 **கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்.**

5 தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார்.

6 இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும்; அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

2 தாவீதின் மன்னிக்கும் குணம்

Dr.ஜெசிந்த் மோகன்

தாவீதின் வாழ்க்கையைப் படிக்கும் பலருக்கு எழும் கேள்வி இதுதான் – தேவன் எப்படி தாவீதை மன்னித்தார் ? தாவீது செய்த பாவங்கள் பல – பிறனது மனைவியை இச்சித்தார். அது மட்டுமின்றி அவளுடைய கணவனையும் கொன்றார். இப்படிப்பட்ட ஒருவரை தேவன் எப்படி மன்னித்தார் ? மன்னித்தது மட்டுமின்றி, எப்படி அவரைத் தன் இருதயத்திற்கு ஏற்றவராய்க் கண்டார் என்பதே பலரின் கேள்வி!.

இயேசு கிறிஸ்து கற்றுத்தந்த ஜெபம் என்ன ? "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்" (மத்.6:12). "மனுஷருடைய தவறுகளை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத்.6:14).

இந்த ஜெபத்தில் உள்ளபடி தாவீது தன் விரோதிகளை, பகைவர்களை மன்னித்ததால் தேவனும் தாவீதின் பாவங்களை மன்னித்தார்.

'கண்ணுக்குக் கண்', 'பல்லுக்குப் பல்' என பழிவாங்கிய காலத்தில், மன்னிப்பு பற்றி தேவகட்டளை இல்லாத காலத்தில், தாவீது பிறரை மன்னித்த விதம் நம் அனைவருக்கும் ஒரு பாடமே!

தாவீது

– மன்னன் சவுலை மன்னித்தார்

– மகன் அப்சலோமை மன்னித்தார்

– மனைவி மீகாளை மன்னித்தார்

– மற்றவர்களை மன்னித்தார்.

இங்கு நாம் தாவீது சவுலை மன்னித்த விதத்தைப் பார்ப்போம்.

தாவீது கோலியாத்தைக் கொன்றபிறகு மக்கள் "சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்" என ஆடிப்பாடினார்கள்

(1 சாமு.18:7–9). இப்பாடலைக் கேட்டதிலிருந்து சவுலுக்கு தாவீதின் மேல் கோபம், வெறுப்பு, எரிச்சல் மற்றும் பொறாமை! 'தாவீது எனக்கு எதிரியாவான்' என எண்ணி தாவீதைக் கொல்ல வழிதேடினான் சவுல். இதை அறிந்த தாவீது ஓடி ஒளிந்தார். சவுலும் தன் படைகளுடன், விடாமல் தாவீதைப் பின் சென்றான்.

தாவீதைக் கொல்ல சவுலின் முயற்சிகள்

சவுல் தாவீதை இருமுறை தன் ஈட்டியால் கொல்ல முயற்சித்தான். அதிலிருந்து தாவீது தப்பினார்.

தான் கொல்ல முடியாததினால் தன் எதிரிகள் தாவீதைக் கொல்லட்டும் என எண்ணி சவுல் தாவீதை வஞ்சகமாய்ப் பெலிஸ்தரிடம் அனுப்பினான். அதிலும் சவுலின் ஆசை நிறைவேறவில்லை. தேவன் தாவீதுடன் இருந்தார்.

தேவன் ஒருவரே நீதிபதி, அவர் மட்டும்தான் மனிதரை நியாயம் விசாரிக்கமுடியும், அவர் மட்டுமே குற்றவாளியைத் தண்டிக்கமுடியும்.

மூன்றாவதாக, தாவீதைக் கொல்ல சவுல் முயன்றபோது தாவீதின் மனைவி அவரைத் தப்பவிட்டாள். தாவீது சவுலுக்குத் தப்பி வனாந்திரத்திலும், மலையிலும், குகையிலும் ஒளிந்து கொண்டிருந்தார். எப்படியானாலும் அவனைக் கொன்றுபோடுவேன் என சவுலும் தாவீதைப் பின் தொடர்ந்தான் (1 சாமு.18,19).

தாவீதின் கையில் சவுல்

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஒரு நாள் சவுல் காலைக்கடனுக்காக ஒரு குகைக்குள் சென்றிருந்தபோது தாவீது அங்கு வந்தார். அப்பொழுது தாவீதின் நண்பர்கள், "இது ஆண்டவர் கொடுத்த சமயம். எனவே சவுலைக் கொன்று விடு" என ஆலோசனை கூறினர். ஆனால் தாவீதோ சவுலைக் கொல்லாமல், "இவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" எனக் கூறி சவுலைத் தப்பவிட்டார் (1 சாமு.24).

மற்றொருமுறை சவுலைக் கொல்ல தாவீதிற்கு நேரம் கிடைத்தது. அப்பொழுதும் தாவீதுடன் இருந்த அபிசாய், "இன்று தேவன் உமது எதிரியை உம் கையில் ஒப்புக்கொடுத்தார்" எனக் கூறினாலும், தாவீது திரும்பவும் "இவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" எனக் கூறி சவுலைக் கொல்ல சம்மதிக்கவில்லை (1 சாமு.26).

இவ்விரு சமயங்களிலும் தாவீதின் கையில் சவுல் அகப்பட்டிருந்த போதிலும், தாவீது சவுலைத் தப்பவிட்டார். தாவீதிற்கு சவுலைக் கொல்ல

உரிமை இருந்தது. ஆனால் தாவீது ஏன் சவுலைக் கொல்லவில்லை? அதற்கு மூன்று காரணங்கள் உண்டு:

தாவீது தேவனை சரியாய் அறிந்திருந்தார்

மேற்கண்ட இரு நிகழ்வுகளிலும் தாவீது கூறும் வார்த்தைகளை நாம் பார்ப்போம்:

- கர்த்தர் எனக்கும், உமக்கும் நடுவில் நின்று நியாயம் விசாரித்து, என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிக்கட்டுவாராக (1 சாமு.24:12).
- கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து... என்னை விடுவிப்பாராக (1 சாமு.24:15).
- கர்த்தர் அவனவனுக்கு அவனவன் நீதிக்கும், உண்மைக்கும் தக்கதாகப் பலன் அளிப்பாராக (1 சாமு.26:23).

'தேவன் ஒருவரே நீதிபதி, அவர் மட்டும் தான் மனிதரை நியாயம் விசாரிக்கமுடியும், அவர் மட்டுமே குற்றவாளியைத் தண்டிக்க முடியும்' என தாவீது தேவனைச் சரியாகப் புரிந்து வைத்திருந்தார். அந்த அறிவு அவருக்குள் இருந்ததால்தான், சவுலைத் தன் கையில் பழிவாங்காமல் தேவனுடைய கைக்கு விட்டுவிட்டார்.

நாமும் இந்த உண்மையை உணர்ந்து நமக்குத் தீமை செய்பவர்களை 'தேவன் இந்த விஷயத்தில் நியாயம் செய்வாராக!' என தேவனிடம் விட்டுவிட்டால் நமக்கும் சமாதானம் வரும்; தேவனும் நம்மைப் பார்த்து பெருமை கொள்வார்.

தாவீது எதிரியை சரியாய் அறிந்திருந்தார்

தேவன் சவுலை இராஜாவாக அபிஷேகம் செய்தது, அந்த அபிஷேகம் சவுலை விட்டு நீங்கினது மற்றும் தன்னை தேவன் இராஜாவாக அபிஷேகம் செய்ததும் தாவீதிற்குத் தெரியும் (1 சாமு.10,18,16). இவையனைத்தும் தெரிந்திருந்தும், 'இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட எனக்கு தேவனால் கைவிடப்பட்ட சவுலைக் கொல்ல உரிமை உண்டு' என உணர்ந்தும், தாவீது சவுலைக் கொல்ல யோசித்தது ஏன்? தன்னை அழிக்க வரும் சவுல் 'கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்' என்னும் ஒரே காரணம்தான்! (1 சாமு.24:6,10, 26:9,11,16).

ஒரு முறை சவுல் தூங்கிக்கொண்டிருந்தபோது அங்கு வந்த தாவீது சவுலின் சால்வையின் தொங்கலை அறுத்தார். அதற்கே தாவீதின் மனம் அடித்துக் கொண்டதாம் (1 சாமு.24:5). தாவீதின் இந்த இளகிய மனம்தான்

தேவனுக்குப் பிடித்ததோ? தாவீதின் இந்த மென்மையான சுபாவம்தான் தேவனுக்குப் பிரியமோ? தாவீதின் தேவனுக்குப் பயப்படும் பயம்தான் தேவன் நுகர்ந்த இனிமையான வாசனையோ?

நாம் எத்தனைமுறை பிறருக்கு விரோதமாய்ப் பேசியுள்ளோம்! இனி நம் விரோதிகள் கூட 'கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்' என உணர்ந்து, பிறருக்கு விரோதமாய்ப் பேசமாட்டோம், யோசிக்கவும் மாட்டோம் என உறுதி எடுப்போம்!

நம் வாழ்க்கையிலும் பிறரை நாம் மன்னிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் நம் மனமேட்டிமையே!

தாவீது தன்னை சரியாய் அறிந்திருந்தார்

இவ்விரு சம்பவங்களிலும் தாவீது தன்னைப் பற்றிக் கூறும் காரியம் கவனிக்கத்தக்கது.

தாவீது ஓர் இராஜாவாக அபிஷேகிக்கப்பட்டிருந்தாலும் சவுலைப் பார்த்து, "செத்த நாயாகிய என்னை ஏன் பின் தொடர்கிறீர்? ஒரு தெள்ளுப்பூச்சி போல் இருக்கின்ற என்னை ஏன் கொல்ல வழி பார்க்கிறீர்?" எனக் கேட்கின்றார் (1 சாமு.24:14; 26:10).

இதில் நாம் தாவீதின் மனத்தாழ்மையைக் காணலாம். தன்னை உயர்வாக எண்ணாமல், தன்னைத் தாழ்த்திப் பேசினார். அவர் தன்னைப்பற்றி நன்கு உணர்ந்திருந்தார்.

நம் வாழ்க்கையிலும் பிறரை நாம் மன்னிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் நம் மன மேட்டிமையே! '**நான்** செய்வதுதான் சரி, பிறர் கூறுவதை **நான்** கேட்க வேண்டிய அவசியம் இல்லை' என நம்மை உயர்வாக வும், மற்றவர்களைத் தாழ்வாகவும் நினைப்பது தான் காரணம். இன்று முதல் நாம் பிறரை உயர்த்தி, நம்மைத் தாழ்த்தி, தேவனே நீதிபதி என அறிந்து மற்றவர்களை மன்னிப்போம்.

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. இன்னும் யார் யாரை நீங்கள் மன்னிக்கவேண்டும் ? எப்படி அதை செயல்படுத்தப் போகிறீர்கள் ?

குழந்தை நல மருத்துவரான Dr.ஜெசிந்த் மோகன், ஒட்டன் சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையில் பணி புரிகிறார்.



3 தாவீதின் ஆதரவளிக்கும் பண்பு

S.சந்திரசேகரன்

தாவீது என்றவுடன் அவர் தேவன் மேல் அதிக விசுவாசம் கொண்டவர் என்றுதான் நம் நினைவுக்கு வரும். ஆனால் பிறரை ஆதரித்த வள்ளல்குணம் தாவீதுக்கிருந்தது.

திக்கற்றவர்களுக்கும், அனாதைகளுக்கும் அடைக்கலமானவர் நம் தேவன். தேவனைப் போலவே தாவீதும் எவ்வாறு பிறரை ஆதரித்தார் என கீழே காண்போம்:

மேய்ப்பர்களை

ஆடு மேய்த்தல் பிரதான தொழிலாயிருந்த அக்காலத்தில், மேய்ப்பர்கள் தம் மந்தையை சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் மேய்த்து வருவார் களாம். அப்போது பிற இனத்து மேய்ப்பர்களுடன் சண்டைகள், சச்சரவுகள், பிரச்சனைகள் வருவதுண்டு. ஆனால் தாவீதோ பிற மேய்ப்பர்களுக்கு ஆதரவுகாட்டி அவர்களை வருத்தப்படுத்தாமல் நடத்தினார். அவர்களது உடமைகளைப் பாதுகாத்துக் கொடுத்தார்.

"உம்முடைய மேய்ப்பர்கள் எங்களோடுகூட இருந்தார்கள். நாங்கள் அவர்களை வருத்தப்படுத்தவில்லை; அவர்களுடைய பொருள் ஒன்றும் காணாமற்போனதுமில்லை" என்று தாவீது நாபாலிடம் தெரிவித்ததிலிருந்து நாம் இதை அறியலாம் (1 சாமு.25:7). நாபால் இறந்த பின்னர் தாவீது, அவனது மனைவி அபிகாயிலை விவாகம்செய்தும் ஆதரித்தார் (1 சாமு. 25:39–42).

பாளையத்தைப் பாதுகாத்தோரை

தாவீது பெலிஸ்தியரோடு போரிடச் சென்றபோது தாவீதின் நகரமான சிக்லாகுவை அமலேக்கியர் கொள்ளையடித்து, அதிலிருந்த சிறுவர் களையும், பெண்களையும், தாவீதின் இரு மனைவிகளையும் சிறைப் பிடித்துச் சென்றுவிட்டனர் (1 சாமு.30).

தாவீது 400 பேருடன் சென்று எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டு வந்தார் (வ.19). போருக்கு வரமுடியாமல் சோர்ந்துபோன 200 பேருக்கு கொள்ளைப் பொருளைப் பிரித்துக் கொடுக்கும்படி தாவீது சொன்னபோது, மக்கள் மறுத்தனர். அப்போது தாவீது "என் சகோதரரே, கர்த்தர் நமக்குத் தந்ததை நீங்கள் இப்படிச் செய்ய வேண்டாம்... போருக்குப் போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவு பொருட்களண்டையில் இருந்தவர்களுக்கும் பங்கு கிடைக்கவேண்டும். சரிபங்காகப் பங்கிடுவீர்களாக" என்றார் (வ.23, 24).

பாளையத்தைப் பாதுகாத்தவர்களுக்கு மட்டுமல்லாது, தன் சிநேகிதராகிய யூதாவின் மூப்பருக்கும் சிலவற்றை அனுப்பி 'ஆசீர்வாத பாகம்' என்று கொடுத்தார். பகிர்ந்தளித்து, பங்கு கொடுத்து ஆதரித்த தாவீதின் பண்பு பாராட்டப்பட வேண்டிய ஒன்று!

தன் மனைவியை

தாவீதின் மனைவியாகிய மீகாள் என்னும் தன் மகளை சவுல், காலீம் ஊரைச் சேர்ந்த பல்த்திக்குக் கொடுத்திருந்தான். அதைத் தடுக்க முடியாத அளவுக்கு காடுகளிலும் குகைகளிலும் பதுங்கி வாழ்ந்து வந்தார் தாவீது (1 சாமு.25:44). சவுலுக்கும், தாவீதுக்கும் நிலவி வந்த யுத்தத்தில் தாவீதின் கை ஓங்கியபோது, சவுலின் குடும்பத்திலிருந்த அப்னேர் பயந்து தாவீதுடன் உடன்படிக்கை செய்தான். அவனிடத்தில் தாவீது, "நீ என் முகத்தைப் பார்க்க வரும்போது, சவுலின் மகளாகிய மீகாளை அழைத்துக்கொண்டு வர வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் (2 சாமு.3:13). இழந்துபோன தன் மனைவி மீகாளை மீட்டு வந்து தன் அரண்மனையில் சேர்த்துக்கொண்டார் தாவீது.

தன் நண்பனின் உறவுகளை

தாவீது அரசனான பின், இறந்துபோன தன் நண்பன் யோனத்தானின் நினைவில் வாடினார். அவனது குடும்பத்தார் எங்கெல்லாம் உண்டோ, அங்கெல்லாம் தேடி விசாரித்தார். அப்பொழுது சவுலின் வீட்டு வேலைக்காரன் சீபா மூலம் யோனத்தானின் மகன் மேவிபோசேத் பற்றி அறிந்தார்.

இரண்டு கால்களும் முடமான அவனைப்பார்த்து தாவீது, "நீ பயப்படாதே, உன் தகப்பனாகிய யோனத்தானின் பொருட்டு நீ தினமும் என்னுடன் உணவு உண்பாய்" என்று கூறி அவனைத் தன்னுடைய அரண்மனையில் வைத்துக் காப்பாற்றினார் (2 சாமு.9:7).

தாவீது சவுலின் வேலைக்காரனான சீபாவை அழைத்து, "உன் எஜமானுடைய மகன் புசிக்க அப்பம் உண்டாயிருக்கும்படி அந்த நிலத்தைப் பயிரிட்டு அதின் பலனைச் சேர்ப்பாயாக" என்று சொல்லி நிலங்களைக் கொடுத்தும் ஆதரித்தார். தன் நண்பனது மாற்றுத்திறனாளி மகனைப் பராமரித்துத் தன் மாளிகையில் தனக்கு இணையாக உணவளித்த தாவீதின் பண்பு அவனது ஆதரவளிக்கும் குணத்திற்கு ஒரு நல்ல சான்று!

மேய்ப்பர்கள், தன் ஜனங்கள், மனைவி, நண்பன் எனப் பலரையும் தாவீது ஆதரித்தார். ஆனால் நாமோ நாம் விரும்புகிறவர்களை மட்டும் ஆதரிக்கிறோம். தாவீதுபோல நாமும் பல நிலைகளிலும் தேவையுடன் இருப்போரை ஆதரிப்போம். அநாதைகளையும், விதவைகளையும் ஆதரிப்பதை நம் வாழ்வின் ஓர் அங்கமாகக் கொள்வோம் (யாக்.1:27).

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை?

2. உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் யார் யாரை ஆதரிக்க வேண்டும்? அதற்காக நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

S. சந்திரசேகரன் ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையில் அலுவலக எழுத்தாளராகப் பணிபுரிகிறார்.

சங்கீதம் 26

(தாவீதின் சங்கீதம்.)

1 கர்த்தாவே, என்னை நியாயம் விசாரியும், நான் என்
உத்தமத்திலே நடக்கிறேன்; நான் கர்த்தரை நம்பி
யிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை.

2 கர்த்தாவே, என்னைப் பரிட்சித்து, என்னைச் சோதித்துப்
பாரும்; என் உள்ளிந்திரியங்களையும் என் இருதயத்தையும்
புடமிட்டுப்பாரும்.

3 உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது;
உம்முடைய சத்தியத்திலே நடந்து கொள்ளுகிறேன்.

4 வீணரோடே நான் உட்காரவில்லை, வஞ்சகரிடத்தில் நான்
சேருவதில்லை.

5 பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன்;
துன்மார்க்கரோடே உட்காரேன்.

6 கர்த்தாவே, நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி,
உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக,

7 நான் குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவி,
உம்முடைய பீடத்தைச் சுற்றி வருகிறேன்.

8 கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது
மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்.

9 என் ஆத்துமாவைப் பாவிகளோடும், என் ஜீவனை
இரத்தப்பிரியரோடுங் கூட வாரிக் கொள்ளாதேயும்.

10 அவர்கள் கைகளிலே தீவினையிருக்கிறது; அவர்கள்
வலதுகை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது.

11 நானோ என் உத்தமத்திலே நடப்பேன்; என்னை மீட்டுக்
கொண்டு என் மேல் இரக்கமாயிரும்.

12 என் கால் செம்மையான இடத்திலே நிற்கிறது; சபைகளிலே
நான் கர்த்தரைத் துதிப்பேன்.

4 தாவீதின் ஜெபங்கள்

அக்ஸா பிரைசி பீட்டர்

தாவீதையும் ஜெபத்தையும் பிரிக்கமுடியாது. தாவீது தேவன்மேல் வைத்த நம்பிக்கையினாலும், விசுவாசத்தினாலும், அன்பினாலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனை நோக்கி ஜெபித்தார். அவருடைய ஜெபங்களை நாம் சங்கீத புத்தகத்தில் காண்கிறோம்.

தாவீதின் ஜெபங்கள் அவருடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து வந்தவை; ஜெபங்களை அவர் எப்பள்ளியிலிருந்தும் கற்றுக்கொள்ளவில்லை. அவருடைய அனுபவத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தான் அவை! அவர் பட்ட கஷ்டங்களிலிருந்து வந்த பரிசுதான் இந்த ஜெபங்கள்! கரும்பு பிழியப்பட்டால்தான் சுவையான சாறு கிடைக்கும். கரும்பு நொறுக்கப்பட்டால்தான் பிறர் இனிப்பான சாற்றைப் பருகமுடியும். தாவீதின் துக்கத்தினால், கஷ்டத்தினால், பாடுகளினால் உருவான ஜெபங்களில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் ஏராளம். . . ஏராளம்.

நம் ஜெபமோ ஓரிரு பரிமாணங்களைக் கொண்டது. ஆனால் தாவீதின் ஜெபமோ பல பரிமாணங்களைக் கொண்டது. தாவீது தன் ஜெபத்தில் உள்ளடக்கியிருந்த ஆறு காரியங்களைப் பார்ப்போம்:

தற்பரிசோதனை

தாவீது தன் ஜெபத்தில் தேவனுக்கு முன்பாக தன்னை தற்பரிசோதனை செய்தார். இப்பொழுது நம்மில் குறைந்து காணப்படுகிற இக்காரியத்தை நாம் தாவீதிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

"கர்த்தாவே, என்னைப் பரீட்சித்து, என்னை சோதித்துப் பாரும்!" எனத் தன்னுடைய அந்தரங்கத்தை தாவீது தேவனுக்குத் திறந்து கொடுக்கிறார் (சங்.26:2). தேவன் ஒருவரே மனிதர்களுடைய இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும் சோதித்தறிகிறவர் (சங்.7:9) என உணர்ந்து, தன்னை ஆராய தேவனிடத்தில் தன்னை ஒப்படைக்கிறார். துன்மார்க்கனை தேவன் வெறுப்பதால் (சங்.11:5) தாவீது தன் ஒவ்வொரு நெருக்கத்திலும் முதலாவது தன்னை ஆண்டவருக்கு முன்பாக வைத்து, பரிசோதனை செய்கிறார்.

தேவ இரத்தத்தால் மீட்கப்பட்ட நாமும், நம் ஜெபங்களில் "தேவனே, என்னை ஆராய்ந்து அறிந்துகொள்ளும்... வேதனை உண்டாக்கும் வழி என்னில் உண்டோ எனப் பார்த்து நித்திய வழியிலே நடத்தும்" என தாவீதைப் போலத் தற்பரிசோதனை செய்வோம் (சங்.139: 23,24).

பாவ அறிக்கை

தற்பரிசோதனை செய்தது மட்டுமல்லாமல், தாவீது ஒவ்வொரு முறையும் தேவனுக்கு முன்பாகப் பாவ அறிக்கையும் செய்கிறார். தாவீதின் 75 சங்கீதங்களில் ஐந்து சங்கீதங்கள் (6,32,38,51,143) 'பாவ மன்னிப்பு சங்கீதங்கள்' என அழைக்கப்படுகின்றன.

தாவீது பாவத்தின் கொடூரத்தைத் தன் வாழ்க்கையில் உணர்ந்திருந்தார். எனவேதான் பாவத்தினால் தன்னுடைய உடல் எந்த அளவு ஆரோக்கிய மின்றி இருந்தது என சங்கீதம் 38இல் எழுதுகிறார்:

என் மாம்சத்தில் ஆரோக்கியமில்லை (வ.3)

என் எலும்புகளில் சவுக்கியமில்லை (வ.3)

என் குடல்கள் எரிபந்தமாய் எரிகிறது (வ.7)

நான் பெலனற்றுப் போனேன் (வ.8)

என் இருதயம் கொந்தளிக்கிறது (வ.8)

என் உள்ளம் குழம்பி அலைகிறது (வ.10)

என் கண்களில் ஒளி இல்லாமற்போயிற்று (வ.10)

இக்காரியங்களெல்லாம் தேவனுடைய கோபத்தினால்தான் ஏற்படு கின்றன எனவும் தாவீது உணர்ந்திருந்தார். எனவேதான் 'உம்முடைய கோபத்தில் என்னைத் தண்டியாதேயும், என் அக்கிரமத்தை நான் அறிக்கையிட்டு என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்' என பாவ அறிக்கை செய்கிறார் (38:1,18).

யூதநாட்டு ஜனங்கள் அவர்களுடைய ஒவ்வொரு கூடுகையிலும், பண்டிகையிலும் பாவ அறிக்கை செய்வது வழக்கம். தேவ இரக்கத்திற்காக அவர்கள் மன்றாடினர். நம் ஜெபத்தில் பாவ அறிக்கை உள்ளதா ? ஒவ்வொரு நாளும் பாவ அறிக்கை செய்து பரிசுத்தமடைவோம்.

அர்ப்பணிப்பு

ஆராதனையில் ஆனந்தமடையும் நாம், ஆராதனையின் உண்மையான அர்த்தமான அர்ப்பணிப்பை விட்டுவிட்டோம். தாவீது தன் ஒவ்வொரு ஜெபத்திலும் தன் தகுதியற்ற நிலையை உணர்ந்து, ஆண்டவருக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார்.

தன் வாழ்வில், தான் தேவனுக்கு மட்டும்தான் அர்ப்பணிக்கப்பட்டவன் என உணர்ந்து தன் வாயை, உதட்டை அவருக்கு முழுவதும் அர்ப்பணித்தார். எனவே தான் "என் வாய் மீறாதபடி தீர்மானம் பண்ணினேன்" எனத் தாவீது கூறமுடிந்தது (சங்.17:3). அது மட்டுமல்ல, தன் உதடுகளால் அந்நிய தேவர்களின் பெயர்களைக்கூட உச்சரிக்கமாட்டேன் எனக் கூறுகிறார் (சங்.16:4).

சரீரம் மட்டுமல்ல, தன் வழிகளும் வாழ்க்கைப் பாதையும் தேவனுக்கென அர்ப்பணிக்கப்பட்டது என உறுதியாய்ப் புரிந்த தாவீது, "நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணியதில்லை... என் துர்க்குணத்துக்கு என்னை விலக்கிக் காத்துக்கொண்டேன்" எனக் கூறுகிறார் (சங்.18:21–23).

அது மட்டுமல்ல, இவ்வுலகில் தான் செய்யவேண்டிய ஒரே காரியம் தேவனைப் பாடுவது மட்டும்தான், அவரைத் துதித்து, அவருடைய அதிசயங்களை விவரிப்பது மட்டும்தான் என அவரைப் பாடுவதிலும் துதிப்பதிலும் அதிக நேரத்தை செலவிட்டார் (சங்.13:6, 9:1).

நம்மிடமும் தேவன் அர்ப்பணிப்பைத்தானே எதிர்பார்க்கிறார். அது தானே புத்தியுள்ள ஆராதனை! ஆடல், பாடல், இசைக்கருவிகள், கைத்தாளங்கள் மட்டுமல்ல, நம் வாழ்க்கையையே தேவனுக்கு அர்ப்பணிப்பதுதான் தேவன் விரும்பும் ஆராதனை! (ரோம.12:1).

தன் உணர்வுகளைக் கூறுதல்

பொதுவாக நாம் தேவனிடத்தில் மேலோட்டமாகப் பேசுகிறோம் அல்லது ஜெபிக்கிறோம். நாம் நம் உணர்ச்சிகளை, உணர்வுகளை, எண்ணங்களை, சிந்தனைகளை அடுத்தவரிடம் மனம்விட்டுப் பேசுவதே தொடர்பு நிலையின் உயர்ந்தநிலை என அறிஞர் கூறுகின்றனர். நம் உள்ளத்தின் ஆழங்களை தேவன் அறிந்திருந்தாலும், அதை நாம் அவரிடம் வெளிப்படுத்தவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார். தாவீதின் கோபம், துக்கம், சந்தோஷம், இழப்பு, சோர்வு, தாகம், சஞ்சலம் என அவரின் அனைத்து உணர்வுகளையும் அவரது ஜெபத்தில் காணலாம்.

- தாவீது தன் சஞ்சலத்தை தேவனுக்குத் தெரியப்படுத்துகிறார் (142:2)
- தன் சோர்வை வெளிப்படுத்துகிறார் (143:4)
- தன்னுடைய வறண்ட நிலையை, தாகத்தைக் கூறுகிறார் (143:6)
- தனது நோயின் கொடுமையை விளக்குகிறார் (6:2)
- தன் கண்ணீரை, பெருமூச்சை மறைக்கவில்லை (6:6,7)
- தன் கேள்விகளை தேவனுக்கு முன்பாக வைக்கிறார் (13:2,3)
- தனது உள்ளக்கிடக்கையை உணர்த்துகிறார் (16:7)
- தன் சந்தோஷத்தை தேவனுடன் பகிர்ந்து கொள்கிறார் (16:9)
- தன்னுடைய காதலை வெளிப்படுத்துகிறார் (18:1)
- தன் நம்பிக்கையை வெட்கப்படாமல் பேசுகிறார் (18:2)
- தன்னுடைய பயத்தை பயப்படாமல் கூறுகிறார் (18:4)
- தனது வெறுப்பை வெளிப்படுத்துகிறார் (139:21,22)

நாமும் நம் சந்தோஷம், கேள்வி, பயம், எதிர்பார்ப்பு, சோர்வு போன்ற எல்லா உணர்வுகளையும் தேவனிடத்தில் தெரியப்படுத்தி, நம்மை தேவனுக்கு முன் உண்மையாய் நிறுத்துவோம்.

சேலா

தாவீதின் சங்கீதங்களில் இவ்வார்த்தையை நாம் அடிக்கடி காணலாம். எடுத்துக்காட்டாக, நான்காம் சங்கீதத்தில் இருமுறை 'சேலா' உள்ளது. இவ்வார்த்தை சுமார் 70 முறை அவருடைய சங்கீதங்களில் காணப்படுகிறது.

சேலா என்றால் என்ன ? இது இசையமைப்பில் பயன்படுத்தப்படும் வார்த்தை. இதன் பொருள் – இடைவெளி அல்லது அமைதி. தாவீதும் தன் ஜெபத்தின் நடுவில் சிறிது இடைவெளிவிட்டார் என எடுத்துக்கொள்ளலாமா ? தான் ஜெபித்து முடித்தபின், தான் என்ன ஜெபம் செய்தோம் என நினைத்துப் பார்ப்பதற்கு அல்லது தேவன் தன் ஜெபத்திற்கு ஏதாவது பதில் அளித்தாரா என தேவ சத்தம் கேட்பதற்குச் சிறு அமைதியைக் கையாள்கிறார்.

இந்த நல்ல பாடத்தை நாமும் கற்றுக்கொள்ளலாமே! ஜெபத்தின் நடுவில் சிறிது இடைவெளி விட்டு தேவன் நம்முடன் பேசக் காத்திருக்கலாம். இல்லையெனில் நம் ஜெபம் தேவனுக்குப் பிரியமா ? நாம் சரியாய்த்தான் பேசுகிறோமா என யோசிக்கலாம்.

இராஜாதிராஜனிடம் பேசும்போது, பயந்து நடுங்கி, கொஞ்சம் பேசி, அவர் பேசுவதை நிறையக் கேட்கலாமே!

ஜெபத்தில் தற்பரிசோதனையும், பாவ அறிக்கையும் முக்கியம். ஆனால் ஜெபத்தில் அதிக நேரம் தரித்திருக்க, பரிசுத்தவானாய் இருப்பது மிகவும் அவசியம். இதைத்தான் தாவீது தன் சங்கீதங்கள் 15,24இல் விளக்குகிறார்.

யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான், தங்குவான், வாசம் பண்ணுவான், நிலைத்திருப்பான் ? (15:1, 24:3)

அதிக நேரம் தேவ சமூகத்தில் தங்கியிருக்க தாவீதின் ஆலோசனைகள் யாவை ? மோசேயின் பத்துக் கட்டளைகளைப் போல தாவீது சங்கீதம் 15இல் பத்து காரியங்களைக் கூறுகிறார்:

1. தன் செய்கையில் உத்தமனாய் நடப்பவன் (வ.2). எந்த பாவத்தையும் மனதார விரும்பி செய்யாதவன்.
2. எது நீதியோ, எது நியாயமோ அதை மட்டும் செய்பவன். நம் தேவன் நியாயாதிபதி. எனவே அவர் வழியில் நடப்பவன் (வ.2)
3. உண்மையை மட்டுமே பேசுகிறவன். 'சரி'யை சரி என்றும், 'தவறை' தவறு எனவும் கூறுகிறவன் (வ.2)
4. தன் நாவினால் பிறரைத் தவறாய்ப் பேசாதவன் (வ.3)
5. தன் நண்பனுக்கு எத்தீமையும் செய்யாதவன் (வ.3)
6. தன் அயலாரின் முதுகுக்குப் பின்னால் பேசாதவன் (வ.3)
7. தேவனைக் கனம்பண்ணி அவருக்குப் பயந்து வாழ்கிறவன் (வ.4)
8. எச்சூழ்நிலையிலும் பொருத்தனை செய்ததில் தவறாதவன் (வ.4)
9. தன் பணத்தை ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் வட்டிக்காக கடன் கொடுக்காதவன் (வ.5)
10. லஞ்சம் வாங்காதவன் (வ.5)

நம் ஜெபவாழ்வு மேம்பட, நாம் தேவ பிரசன்னத்தில் மகிழ்ந்து திளைத்திருக்க இப்பத்துக் காரியங்களை நாம் பின்பற்றவேண்டும். தேவன் நம் ஜெபத்தை மட்டுமல்ல, நம் வாழ்க்கையையும் பார்க்கிறவர். பாவத்தில் வாழ்ந்து, ஜெபத்தில் பரிசுத்தரைப் பார்க்க முடியாது. பரிசுத்தமாய் வாழ்ந்து தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் பரவசம் அடைவோம்!

இனிமேல் நம் ஜெபங்களும் தாவீதின் ஜெபத்தைப் போல தற்பரிசோதனை செய்து, பாவ அறிக்கையிட்டு, நம்மை அர்ப்பணித்து, நம் உணர்வுகளை தேவனுக்கு வெளிப்படுத்தி, சிறு இடைவெளிகளுடன்

கூடிய ஜெபமாக மாறட்டும். அது மட்டுமல்ல நாம் பரிசுத்தமாய் வாழும் போது தேவ பிரசன்னத்தில் அதிக நேரம் நிலைத்திருக்க முடியும்.

ஜெபம் – ஒரு தற்பரிசோதனையின் நேரம்

ஜெபம் – ஒரு பாவ அறிக்கையின் நேரம்

ஜெபம் – ஓர் அர்ப்பணிப்பின் நேரம்

ஜெபம் – தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் நேரம்

ஜெபம் – அமைதியின் நேரம்

ஜெபம் – பரிசுத்த வாழ்வைப் பிரதிபலிக்கும் நேரம்.

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. உங்களுடைய ஜெபத்தில் இல்லாத காரியங்கள் என்னென்ன ? அதை உங்கள் ஜெபத்தில் சேர்க்க என்ன செய்யப்போகிறீர்கள் ?

அக்ஸா பிரைஸி பீட்டர், ஒட்டன்சத்திரம் செவிலியர் பள்ளியில் பயின்று செவிலியராகப் பணிபுரிகிறார்.

5

தாவீது தேவனை சார்ந்துகொண்டார்

தியோடர் இராஜன் & ஹெவன்லின்

சார்ந்துகொள்ளுதல் என்பது ஒருவர் மற்றொருவர் ஆதரவில் வாழ்வதே ஆகும். ஒருவர் தன் பலவீனத்தை அறியும்போதும், தன்னுடைய இயலாமையை ஏற்றுக்கொள்ளும்போதும்தான் மற்றவரை சார்ந்து கொள்ளத் தொடங்குவார்.

சார்ந்து வாழ்வதை உலகம் பலவீனமாகக் கருதுகிறது. ஆனால் கிறிஸ்தவ வாழ்வில் தேவனைச் சார்தல் வெற்றியைக் கொண்டுவரும்.

தேவனைச் சார்ந்துகொள்ளுதல் தேவனோடுள்ள நம் உறவை பலப் படுத்தும், நாம் சிறுகவும் அவர் பெருகவும் வழிவகுக்கும், கிறிஸ்துவின் சிந்தை நம்மில் பெருகும், அவரைப்போல மாற்றும். தேவனைச் சார்ந்து கொள்ளும்போது சுயம் சாகும், தேவ சித்தம் நிறைவேறும்.

தாவீது தன் வாழ்வில் முழுமையாக தேவனைச் சார்ந்துகொண்டார். தான் மேய்ப்பனாய் இருந்தபோதும், அரசனாக மாறியபோதும் தேவனைச் சார்ந்துகொண்டார். தாவீது தேவனைச் சார்ந்துகொண்டபோது தேவன் எப்போதும் அவரோடிருந்தார் (1 சாமு.18:14). அவருடைய வாழ்க்கையைக் கண்ட பிறர், தேவன் தாவீதோடிருக்கிறதை அறிந்துகொண்டனர். தாவீது எக்காரியத்தில் தேவனைச் சார்ந்துகொண்டார் என்று பார்ப்போம்:

மகிழ்ச்சியில்

நிகழ்ச்சிகளினால் வருவது சந்தோஷம்; நிகழ்ச்சிகளைச் சாராதது மகிழ்ச்சி. தாவீது உண்மையான மனமகிழ்ச்சியின் இரகசியத்தை அறிந்தவராயிருந்தார். உலகின் பல காரியங்களை அவர் அனுபவித்தாலும் அவருக்கு மனமகிழ்ச்சியைக் கொண்டு வந்தது தேவனுடைய உறவுதான்! அதனால்தான் ‘கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு’ என்று கூறுகிறார் (சங்.37:4). மேலும் கீழ்க்காணும் வரிகளை அனுபவப்பூர்வமாக எழுதுகிறார்:

கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும் (சங்.34:2)

அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் (சங்.34:1)

கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது (சங்.34:4).

நம் மகிழ்ச்சிக்குக் காரணம் உலகமும், உலகத்தின் காரியங்களுமா அல்லது தேவ உறவும், அவரோடுள்ள ஐக்கியமுமா என்று ஆராய்ந்து பார்ப்போம்.

துக்கங்களில்

தாவீது பல பாடுகளின் மத்தியில் கடந்து சென்றார். பல சமயங்களில் தன் உயிருக்காக ஓடினார். மரண விளிம்புகளில் நடந்துசென்றார். அந்நாட்களில் அவரை தைரியப்படுத்தினது தேவன் மட்டுமே! அதனால் தான் அவர் எழுதிய சங்கீதங்களில் இன்னும் ஜீவன் இருக்கிறது. அவை ஒவ்வொன்றும் தேவனை நோக்கிக் கதறிய கதறல்கள். அவை தேவனை முழுமையாய்ச் சார்ந்துக் கொண்டதன் வெளிப்பாடு!

"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு" (சங்.42:5) என்று அவர் தன்னைத்தான் தேவனுக்குள் திடப்படுத்திக் கொள்வதைப் பார்க்கலாம். 'தகப்பனும் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னை சேர்த்துக் கொள்வார்' என்று உறுதியாகக் கூறினார்.

நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமானவர், நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங்.34:18) என்பது அவர் அனுபவம்! அவருடைய பல சங்கீதங்களில் அவருடைய இருதயத்தின் வேதனைகளையும் தேவனுடைய கிருபையையும் காணலாம் (சங்.86,110, 36:7, 70:1,5). உதாரணமாக, 'நான் துன்பத்தின் நடுவிலே நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்' (சங்.138:7), 'என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னை தைரியப்படுத்தினீர்' என்றார் தாவீது (சங்.138:3).

நாம் கஷ்டங்களின் வழியாய்ப் போகும்போது தேவனைப் பற்றிக் கொள்வோமானால், போராட்டங்கள் நம்மை மேற்கொள்ளா. வலிகளின் வழிகள் நம்மை தேவனில் உறுதிப்படுத்தும், பக்குவப்படுத்தும், மற்றவர் களுக்கு அவை பயனுள்ளதாயிருக்கும்!

பெலத்திற்காக

கோலியாத்தை தாவீது எதிர்த்தபோது அவருடைய பலம், ஆயுதம் எல்லாம் சேனைகளின் கர்த்தருடைய நாமம் மட்டுமே! (1 சாமு.17:45).

“யுத்தம் கர்த்தருடைது, அவர் உங்களை எங்கள் கைகளில் ஒப்புக் கொடுப்பார்” என்று தாவீது கூறினார் (வ.47). சங்கீதங்களில் தாவீது தேவனை ‘நீர் என் கன்மலை, அடைக்கலம், துணை (சங்.62:2, 63:7) என அழைக்கிறார். நம்முடைய போராட்டம் பொல்லாத ஆவிகளுடன் இருப்பதால் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்தவர்களாய் அவரையே சார்ந்துகொள்வோம் (எபே.6:12–14).

தாவீது தன் சங்கீதங்களில் தேவனை, பல பெயர்களைக் கொண்டு, அதிக உரிமையோடு அழைப்பதைப் பார்க்கலாம். அது மட்டுமல்ல, தேவனால் மட்டுமே தனக்கு வெற்றி கிடைத்தது என்றும் அவர் அறிந்திருந்தார்.

நாம் பல நேரங்களில் பலவீனமாக உணர்கிறோம், சோர்ந்து போகிறோம், எப்படி முன்னேறப்போகிறோம் எனப் பதறுகிறோம். தேவனை சார்ந்து கொள்ளும் இரகசியத்தை அறிந்த அப்போஸ்தலன் பவுல் எழுதுகிறார்: “என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு” (பிலி.4:13). நாமும் தேவ பெலத்தைப் பெற்றுக் கொள்ள அவரையே சார்ந்து கொள்வோம்.

வழிநடத்துதலுக்காக

தேவன் பல மனிதர்களை அவர்களது வாழ்நாள் முழுதும் வழிநடத்தியதை வேதத்தில் வாசிக்கிறோம். ஆபிரகாம், யாக்கோபு, மோசே, சாலமோன், எலியா போன்ற பலரை தேவன் அழகாய், அற்புதமாய், ஆச்சரியமாய் வழிநடத்தி பாதுகாத்து வந்தார். தாவீது சிறுவனாக இருந்தது முதல் அரசனாகியதுவரை தேவனை எப்படிச் சார்ந்துகொண்டார் என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

பல நேரங்களில் தேவ ஆலோசனையைக் கேட்கிறவராக, அவருடைய வழிநடத்துதலுக்குக் காத்திருக்கிறவராக தாவீதைக் காண்கிறோம் (1 சாமு.30, 2 சாமு.5). ‘உம்முடைய பாதைகளைப் போதித்தருளும்’ என்று கேட்கிறார் (சங்.25:4). நாம் தேவனுக்குக் காத்திருக்கிறோமா ?

நம் இறந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் யாவற்றையும் அறிந்திருக்கிற நம் தேவன் ஒருவர் மட்டுமே நம்மைச் சரியான வழியில் நடத்தமுடியும்; ஆபத்துக்கள் நிறைந்த இவ்வுலகில் நம்மைப் பாதுகாக்க முடியும். ஆகவே உன்னதரின் செட்டைகளின் மறைவில் நம்மை மறைத்துக் கொள்வோம் (சங்.91:1). தேவன் நடத்துவார்.

நீதிக்காக, நியாயத்திற்காக

தன்னைக் கொல்ல முயன்ற சவுல், பலமுறை தன் கைகளில் அகப்பட்டுக் கொண்டாலும் நியாயம் செய்வதற்காக, தாவீது தேவனையே சார்ந்து கொள்கிறார் (1 சாமு.19:9,19:15,26:11,23). 'கர்த்தர் நியாயம் விசாரிக்கட்டும்' என்கிறார் (1 சாமு.24:12). சீமேயி தாவீதைத் தூஷித்தபோதும் 'தேவன் அனுமதிக்கிறார்' என்று ஏற்றுக்கொள்கிறார். 'உத்தமும் நேர்மையும் என்னைக் காக்கக்கடவது' என்றார் (சங்.25:2).

இதுபோன்ற நேரங்களில் நாம் பதிலுக்குப்பதில் செய்கிறோம். ஆனால் "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன்" என்று கர்த்தர் சொல்கிறார் (ரோ.12:19). இதைத் தாவீது அறிந்திருந்ததால் எதிரிகளைப் பழிவாங்கவில்லை. இதைத்தான் பவுல், "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்... யோக்கியமானவைகளை செய்யுங்கள்... சமாதானமாயிருங்கள்" என்று எழுதினார் (ரோ.12:17,18). நாம் இதைப் பின்பற்றினால் தேவன் நமக்காக வழக்காடுவார். இல்லையெனில் தேவன் நம்பக்கம் நிற்க மாட்டார்.

பரிசுத்தத்திற்காக

தாவீது தன் பரிசுத்தத்திற்காக தேவனைச் சார்ந்துகொள்கிறார். பல சங்கீதங்களில் பரிசுத்தத்திற்காக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். 'தன்னை ஆராய்ந்து அறியவும் (சங்.139:23), வேதனை உண்டாக்கும் வழிகளிலிருந்து விலக்கவும் (சங்.139:24), துன்மார்க்கத்திற்கு இணங்காமல் காக்கவும்' (சங்.19:13) தாவீது தேவனிடம் வேண்டுகிறார்.

தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய போதிக்கும்படியாகவும் (சங். 143:10), தன் வாயின் வார்த்தையும், தியானமும் கர்த்தருடைய சமூகத்தில் சரியாயிருக்கவும் தாவீது வேண்டிக்கொள்கிறார். தான் பத்சேபாளோடு செய்த பாவம் உணர்த்தப்பட்டபோது தன்னைப் பரிசுத்தப்படுத்தும்படியாய், கழுவும்படியாய் வேண்டுகிறார் (சங்.51). பெலவீன பாண்டங்களாகிய நாம் பரிசுத்தத்தை எப்படிக் காத்துக்கொள்கிறோம்? விழுந்துவிடாதிருக்க தேவனையே சாருவோம்!

நாம் பாவத்திலே கர்ப்பம் தரிக்கப்பட்டு, பாவ உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பரிசுத்தமாய் வாழ்வது என்பது, ஒரு கயிற்றில் நடப்பது போன்ற அனுபவமாகிவிட்டது. ஆம், கரணம் தப்பினால் மரணம் – நித்திய மரணம். அதிலிருந்து நம்மை விடுவிக்க நம் தேவனின் நாமம், அவரது பிரசன்னம், அவருடைய இரத்தத்தால் மட்டுமே முடியும்.

நெருக்கங்களில்

நம் வாழ்வில் குடும்பம், உறவு, பணம், பாவம் போன்ற பல பிரச்சினைகளால் நாம் நெருக்கப்படுகிறோம். அச்சமயங்களில் சோர்ந்துபோகாமல், விழுந்து விடாமல், பின்வாங்கிப்போகாமல் தாவீதைப்போல தேவனிடத்தில் பெலன் கொண்டு எழும்பிப் பிரகாசிப்போம்.

ஒருவர் மனதிலிருந்து துதிபாடல் அல்லது கவிதை எப்பொழுது வரும்? அதிக துக்கம், அதிக சந்தோஷம் வரும்போது அல்லது ஓர் ஆச்சர்யமான அல்லது அதிசயமான காரியத்தைக் காணும்போதுதான்! தாவீதும் அப்படித் தான் எல்லா சூழ்நிலைகளிலும் தேவனைச் சார்ந்திருந்ததால் அநேக சங்கீதங்களை எழுத முடிந்தது; இன்னும் அவை நம்முடைய இருதயங்களை வருடுகிறவைகளாக இருக்கின்றன. அவைகளின் மகுடம் 23ஆம் சங்கீதம். இதை அவர் மேய்ப்பனாக இருந்தபோதோ அல்லது தன் மகன் அப்சலோமால் விரட்டப்படும்போதோ எழுதப்பட்டிருக்கலாம் என்று வேத வல்லுநர் கூறுகின்றனர். ஆம், சங்கீதம் 23

தாவீதின் கண்ணீரில் தெறித்த வைரக்கற்கள்!
அது நம்பிக்கையின் நங்கூரம்!
இதயத்தின் துதிபாடல்!
எதிர்காலத்தின் அறைகூவல்!
காலத்தால் அழியாத கல்வெட்டு!

ஒருமுறை இந்த 23ஆம் சங்கீதத்தை ஒரு நடிகர் மேடையில் நடித்துக் காட்டினார். மிக திறமையாக, அருமையான குரல் வளத்தோடு பேசி நடித்தார். கரவொலி வானைப் பிளந்தது. அதன் பின் ஒரு தேவ ஊழியரும் அதே சங்கீதத்தைச் சொல்லும்படியாய் அனுமதிக்கப்பட்டார். அவருக்குக் குரல்வளம் இல்லை, நடிப்புத்திறன் இல்லை. ஆனாலும் அவர் சொல்லி முடித்தபோது கலங்காத கண்களில்லை. அதைக் கண்ட பார்வையாளர்கள் கூறினார்கள்: "நடிகருக்கு சங்கீதம் தெரிந்திருக்கிறது, ஊழியருக்கோ அந்த நல்ல மேய்ப்பனைத் தெரிந்திருக்கிறது".

தாவீது தேவனைச் சார்ந்துகொண்டதுபோல, நாமும் எப்போதும் தேவனைச் சார்ந்துகொள்ளுவோம். அப்போது நாம் கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்து, அவருடைய சிந்தைகளைத் தரித்துக்கொண்டு, அவரைப் பிரதிபலிக்கிறவர்களாக வாழ்வோம். அவர் நம்மை அவருடைய இருதயத்திற்கு ஏற்றவனாகக் காண்பார்.

சுயபரிசோதனைக்கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. நீங்கள் இன்னும் எந்தெந்தக் காரியங்களில் தேவனைச் சார்ந்துகொள்ள வேண்டும் ? எப்படி அதை நடைமுறைப்படுத்தவேண்டும் ?

தியோடர் இராஜன், ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையில் மருத்துவப்பதிவேடு பயிற்சியின் ஆசிரியர். இவரது மனைவி ஹெவன்லின், அம்பிளிக்கை கிறிஸ்தவ செவிலியர் கல்லூரி விரிவுரையாளராகவும், ஆலோசகராகவும் பணிபுரிகிறார்.

6 தாவீதின் விசுவாசமும் நம்பிக்கையும்

K. வளர்மதி & P.நீத்து

விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி.11:6) என்பது நாம் அனைவரும் அறிந்ததே! ஆகவே தேவனுடைய இருதயத்திற்குப் பிரியமான தாவீதும் விசுவாசத்தில் வீரராகவும், தேவன் மேல் வைத்த நம்பிக்கையில் எக்குறைவும் இல்லாதவராகவும் இருந்தார் என்பதில் எந்த ஐயமுமில்லை. தன் வாழ்வு முழுதும் தாவீது தேவனை மட்டுமே விசுவாசித்தார். அவர் எந்தெந்த சூழ்நிலைகளில் எப்படி தேவன்மேல் விசுவாசமாயிருந்தார் என இங்கு பார்க்கலாம்:

ஆடுகளை மேய்க்கும்போது

தாவீது தேவன்மேல் வைத்த நம்பிக்கையை அவருடைய சிறுவயதில் அவர் செய்த காரியத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். தாவீது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது ஒருமுறை ஒரு கரடியும் மறுமுறை ஒரு சிங்கமும் வந்து மந்தையிலிருந்த ஆட்டைப் பிடித்துக் கொண்டன. தாவீது அதைத் தொடர்ந்துபோனார். அது அவர் மேல் பாய்ந்தது. அவர் அதன் தாடியைப் பிடித்து அதை அடித்துக்கொன்று போட்டு, ஆட்டை அதன் வாய்க்குத் தப்புவித்தார். சிங்கத்தை மனித பலத்தால் கொல்ல முடியாது. தேவ பலத்தினால் மட்டுமே முடியும்! எனவே தான் தாவீது "என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த **கர்த்தர்"** (1 சாமு.7:37) என்றார்.

நாமும் நம் வாழ்வில் கரடி, சிங்கம் போல பயங்கரமான பெரிய பிரச்சனைகளை எதிர்கொள்ள நேரலாம். நாம் எதிர்பார்க்காத நேரங்களில் நம்மை விழுங்கலாம் என அவை நம்மை நோக்கிப் பாய்ந்து வரலாம். நம் வேலையை, சொத்துக்களை, படிப்பை, பிள்ளைகளை அழிக்கலாம் என அவை நம்மைச் சுற்றித்திரியலாம். நாமும் தாவீதைப்போல 'தேவன் இதிலிருந்து என்னை தப்புவிப்பார்' என்ற நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் தொடர்ந்து தேவ பாதையில் ஓடுவோம்!

கோலியாத்தை எதிர்க்கும்போது

"என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த **கர்த்தர்** இப்பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார். விருத்தசேதனமில்லாத இப்பெலிஸ்தனும் அவைகளில் ஒன்றைப்போல் இருப்பான்" என்று தாவீது சவுலிடம் கூறியது வெறும் வார்த்தைகள் அல்ல, 'இன்று இப்பெலிஸ்தன் இறப்பது உறுதி, நான் இவனிடம் சாகமாட்டேன்' என்ற மாபெரும் பொருளடங்கிய விசுவாச அறிக்கை! (1 சாமு.17:37).

தாவீது கோலியாத்தைப் பார்த்து, "நான் வந்ததற்கு நோக்கம் இல்லையா?" என்றார் (1 சாமு.17). அவர் தேவதிட்டத்தை முன்பே அறிந்திருந்தார் என்பதை இது உணர்த்துகிறது.

சவுல் தாவீதுக்குத் தன் போர் உடைகளை உடுத்தியபோது, தாவீது அவற்றின்மேல் விசுவாசம் வைக்காமல் அவைகளைக் கழற்றிப்போட்டார். தாவீது, "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்று கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டார். தாவீது தன் பையில் இருந்து ஒரு கல்லை எடுத்துக் கவணில் வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தார். கல் அவன் நெற்றியில் பதிந்ததால் அவன் பின்புறமாகத் தான் விழுந்திருக்க வேண்டும். ஆனால் அவன் தாவீதுக்கு முன் முகங்குப்புற விழுந்தான். ஒரு கவணினாலும், ஒரு கல்லினாலும் தாவீது பெலிஸ்தனை வென்றது கர்த்தர் மேலிருந்த விசுவாசத்தினால் தான்! நெற்றியில் பதிந்த கல்லுடன் கோலியாத்தின் மண்டை ஓடு இன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது இச்சம்பவத்தை உறுதிப்படுத்துகிறது.

சவுல் கைவிட்டபோது

தாவீது கர்த்தரிடத்தில் திட நம்பிக்கையாய் இருந்தார். பல நேரங்களில் சவுல் தாவீதின் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்டார். ஆனாலும் தாவீது அவரைக் கொல்லாமல், "கர்த்தர் அபிஷேகம் செய்தவர் மேல் தன் கையைப் போட்டு குற்றமில்லாமற்போகிறவன் யார்?" என்று கூறினார் (1 சாமு.26:8). இப்படி தாவீது கர்த்தரை முழுமையாக நம்பினார்.

தாவீதின் வாழ்வில் பல ஏமாற்றங்கள், தனிமைப்படுத்தப்படல், கஷ்டங்கள் நிகழ்ந்தன. எனினும் அவர் திட நம்பிக்கையாய் 'என் தகப்பனும் என் தாயும்

என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்ளுவார்' எனக் கடவுளைப் பற்றிக்கொண்டு வாழ்ந்தார் (சங்.27:10).

தாவீதின் மீதிருந்த பொறாமையினால் சவுல் தாவீதைக் கொன்றுபோடும்படி திட்டமிட்டான். அச்சூழ்நிலையிலும் தாவீது விசுவாசமாய் "கர்த்தர் எல்லாத் துன்பத்திற்கும் என்னை நீங்கலாக்கிவிடுவார்" (1 சாமு.19) என்றார். தாவீது, "கர்த்தர் எனக்கும், உமக்கும் நடுவில் நின்று நியாயம் விசாரித்து, கர்த்தர் தாமே என் காரியத்தில் உமக்கு நீதியைச் சரிகட்டுவாராக" (1 சாமு.24:12) என்றார். கர்த்தர் மேல் அவர் வைத்த நம்பிக்கையின் அடையாளமே இவ்வார்த்தை!

சீமேயி தூஷித்தபோது

தாவீது தன் வாழ்வில் நேரிட்ட ஒவ்வொரு கஷ்டத்திலும் மற்றவரைச் சார்ந்து நில்லாமல், பிறரிடம் ஆலோசனை கேட்காமல், தன் முழு இருதயத்தோடும் கர்த்தரையே நம்பி இருந்தார். தான் பெற்ற ஒவ்வொரு நன்மைக்காகவும் அவர் தேவனுக்கு நன்றி சொல்ல மறந்ததும் இல்லை. "கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார். என் இருதயம் அவரை நம்பியிருந்தது. நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் மகிழ்கிறது. என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்" என்கிறார் தாவீது (சங்.28:7).

உதாரணமாக, சீமேயிக்கு தாவீது பல உதவிகள் செய்திருந்தபோதிலும் தாவீது தனிமைப்படுத்தப்பட்டபோது, சீமேயி தாவீதை நோக்கி, "பேலியாளின் மனுஷனே, தொலைந்து போ" என்றான் (2 சாமு.16:7). அப்போது தாவீது பொறுமையாகக் கர்த்தரையே நம்பி இருந்தார். சீமேயி தாவீதை நோக்கி கற்களையும் மண்ணையும் எறிந்தபோதும் தாவீது கோபப்படாமல், "கர்த்தர் என் சிறுமையைப் பார்த்து, இந்த நாளில் அவன் நிந்தித்த நிந்தைக்குப் பதிலாக எனக்கு நன்மையை சரிக்கட்டுவார்" என்றார் (2 சாமு.16:12).

அப்சலோமால் துன்பப்படுத்தப்பட்டபோது

அப்சலோமினிடத்திலிருந்து தனக்கு துன்பம் வரும் என்று அறிந்தவுடன் தாவீது புறப்பட்டுப்போனார். அவர் தன் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டுப் போகும்போது 'கர்த்தர் தந்த பதவி பறிபோகிறதே, என்ன வாழ்க்கை இது!' என நினைத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி நினைக்காமல் தன் வாழ்வில் நடந்த ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொண்டு கர்த்தர்மேல் நம்பிக்கை கொண்டிருந்தார் (2 சாமு.15:14).

தன் வாழ்வில் இத்தனை பிரச்சனைகள் வந்தபோதும் தாவீது தேவனைத் தொழுதுகொள்ள மறக்கவில்லை (2 சாமு.15:32).

யுத்தத்தின்போது

அமலேக்கியர் சிக்லாகின் மேல் வந்து அவர்களைக் கொள்ளையடித்து அதிலிருந்த பெண்கள், சிறியோர், பெரியோர் அனைவரையும் சிறை பிடித்தார்கள். தாவீதின் இரு மனைவிகளையும் பிடித்துச் சென்றார்கள். தாவீது மிகவும் நெருக்கப்பட்டார். தாவீது கர்த்தரை நோக்கி, "நான் அந்தத் தண்டைப் பின் தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா?" என்று கேட்டார். அதற்கு அவர், "அதைப் பின்தொடர்ந்து செல். அதை நீ பிடித்து சகலத்தையும் திருப்பிக்கொள்வாய்" என்றார். ஆகவே தாவீது விசுவாசத்தினால் தொடர்ந்து சென்று அவர்களை முறியடித்தார்.

தாவீதின் விசுவாசம் பெரிது! 'விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்' என்னும் வசனத்திற்கு ஏற்ப தாவீது துன்ப நேரத்தில் தேவனை விசுவாசித்து தேவ மகிமையைக் கண்டார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்போம்!

நம் வாழ்வில்

நாம் பலமுறை நம்பிக்கை இழந்து கர்த்தரை விட்டு தூரமாகப் போயிருக்கலாம். 'ஏன் இத்துன்பம், கஷ்டம், கண்ணீர்? இறந்து போகலாமா?' என நினைத்திருக்கலாம். அப்போது தேவன் நம்மைக் காத்துக்கொண்டதை நினைத்தால் நம் கண்களில் நீர் வராமல் இருக்காது.

பலர் தம் நண்பர், உடன் பிறந்தோர் அல்லது உறவினரை நம்பி அவர்களால் ஏமாற்றப்படலாம். சிலர் தம் பெற்றோரை நம்பி அவர்களாலும் கை விடப்படலாம். அந்நேரத்தில் பலர் சாகும் நிலைக்குக்கூட செல்லலாம். எனினும் தாவீது சாகவோ அல்லது மற்ற எத்தீயசெயலிலும் ஈடுபடாமல் கர்த்தரை மட்டும் நம்பி இருந்தார்.

'நான் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை' என்று வாக்களித்துள்ள நம் தேவனை நம்பி அவருடன் செல்வோம்!

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை?

2. நீங்கள் இன்னும் என்னென்ன சூழ்நிலைகளில் தேவனை நம்ப வேண்டும்? அதை எப்படி நடைமுறைப்படுத்தவேண்டும்?

K.வளர்மதி, ஒட்டன்சத்திரம் செவிலியர் பள்ளியில் பயின்று செவிலியராகப் பணிபுரிகிறார்.
P.நீத்து, ஒட்டன்சத்திரம் செவிலியர் பள்ளியில் பயின்று செவிலியராகப் பணிபுரிகிறார்.

கோலியாத்தின் மண்டையோடு கண்டெடுப்பு

டாக்டர் ரிச்சர்ட் மார்டின் ஒரு தொல் பொருள் ஆராய்ச்சியாளர் மற்றும் விஞ்ஞானி. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர். இவரும், இவரது உதவியாளர்களும், ஏலா பள்ளத் தாக்கில் வழக்கமான தொல்பொருள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது, கோலி யாத்தும் தாவீதும் யுத்தம் செய்த இடம் என்று சொல்லப்பட்ட மேற்கு எருசலேமில் யூதேயா மலைகளின் அடிவாரத்தில் ஒரு பெரிய மண்டையோட்டைக் கண்டடைந்தனர்.

பிறகு அது சோதனைக்குட்படுத்தப்பட்டு, அம்மண்டையோடு கோலியாத்தினுடையது என்றும், அம்மண்டையோட்டில் ஒரு கல் பதிந்துள்ளது என்றும், அது தாவீதின் கவணிலிருந்து வந்தது என்றும் புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வேதாகம அறிஞர்களின் ஒரு குழு உறுதி செய்துள்ளது. இதில் எந்தவித சந்தேகமும் இல்லையென வேதாகம அறிஞர்கள் உறுதியாகக் கூறுகின்றனர். இதுகுறித்து விஞ்ஞானி டாக்டர். ரிச்சர்ட் மார்டின் எருசலேமில் கூறியது: "வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே கோலியாத்துக்கும் தாவீதுக்கும் இடையே நடந்த யுத்தத்தை இக்கண்டுபிடிப்பு நிரூபிக்கிறது."

சத்திய தூது பிப்ரவரி– மார்ச் 2014

7 தாவீதின் பாவமும், பாவ மன்னிப்பும்

Dr.ஜெனிபின் & N.தீமோத்தேயு



தாவீது பத்சேபாளுடன் பாவம் செய்து, அவள் கணவனை வஞ்சகமாகக் கொன்றதை யாரும் அறியாதிருந்தனர். எல்லாம் நன்றாகச் சென்றுகொண்டிருந்தது போல்தான் தோன்றியது. பத்சேபாளுடன் தாவீதின் புது வாழ்க்கை தொடர்ந்தது. அவர்கள் தங்கள் குழந்தையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால்... ஆனால் கர்த்தருக்கு இதில் சந்தோஷம் இல்லை (2 சாமு.11:27).

கடவுளும், மனிதனும், பாவமும்

கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி நாத்தான், தாவீதின் குற்றத்தை நயமாக எடுத்துரைக்கிறான். அது ஒரு கதை... அரசராகிய தாவீதும் அதை ஆவலாய்க் கேட்டார். வழிப்போக்கனுக்கு ஏழையின் ஒரே ஆட்டைக் கொன்று விருந்தளித்த ஒரு பணக்காரனின் கதை அது... ஏழையின் மேல் இரக்கங்கொண்ட தாவீது தன் தீர்ப்பை அளித்தார் அது நீதியாகவும், நன்றாகவும்தான் தெரிந்தது. ஆனால் நாத்தான், "அந்த மனிதன் நீ தான்" எனக் கூறும்வரை அந்த இறுமாப்பான, ஏமாற்றுத்தனமான பாவத்தைச் செய்தது தானே என தாவீது அறியவில்லை. இதிலிருந்து நாம் கற்றுக் கொள்வன யாவை ?

- நாம் ஞானியாய் இருக்கலாம் – எது சரி, எது நீதியானது என நாம் அறிந்திருக்கலாம். ஆனால் நடைமுறை வாழ்வில் பாவம் யாரையும் விட்டு வைப்பதில்லை. நம் உணர்வு, சிந்தனை, முடிவுகளில் நாம் மிகவும் கவனமாயிருக்கவேண்டும். ஏனெனில் எதிரியானவன் யாரை விழுங்கலாமென கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல் அலைந்து கொண்டிருக்கிறான் (1 பேது.5:8).

நாத்தானை தாவீதிடம் அனுப்ப, கடவுள் ஒரு வருடம் காத்திருந்தார். கடவுளின் சில செயல்கள் நமக்கு விநோதமாகத்தான் இருக்கும்.

- கடவுள் ஒரு வருடம் கழித்தும் ஏன் தாவீதைக் கைவிடவில்லை ?

நம் கடவுள் மனஉருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரணகிருபையும் நிறைந்தவர் (சங்.86:15).

◆ கடவுள் ஏன் தாவீதை, பிறர் அறிய சங்கடப்படுத்தவில்லை ?

ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டு மென்பது கடவுளின் விருப்பம் (2 பேது.3:9). எங்கள்மேல் மன உருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும் உள்ள கடவுளே, உமக்கு நன்றி!

பாவத்தைக் கடவுள் கையாளுதல்

நாத்தான் மூலமாக தாவீதிடம் கடவுள் பேசினார்: "நான் உனக்கு அனைத்தையும் கொடுத்தேன். இவை போதாதிருந்தால் இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். ஆனால் நீ ஏன் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்தாய் ? உனக்கு இத்தனையும் நான் தந்தும் நீ ஏன் என்னை இழிவுபடுத்தினாய் ?" தாவீது செய்த காரியம் கடவுளை மிகவும் வருத்தியது. ஆகவே நீதியான தேவன் தாவீதின் தவறுகளுக்கு அவருக்கு தண்டனை அளித்தார். ஆனால் தாவீதை மன்னித்தார்.

- கடவுளை இழிவுபடுத்துவதும், தேவ கட்டளையை மீறுவதும் பாவம்.
- நமக்கு மகிழ்ச்சியையும் தேவனுக்கு வருத்தத்தையும், தரும் எக்காரியமும் பாவமே!
- ஒருவர் அரசனாக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் பாவியாக இருந்தாலும், பரிசுத்தவானாக இருந்தாலும் பாவத்தின் விளைவுகள் அவரைத் தொடரும்.
- கடவுள் ஒவ்வொரு பாவத்திற்கும் பலனைத் தருகிறார்.

'பாவத்தின் சம்பளம் மரணம்' (ரோ.6:23). ஆகவே நம் பாவத்திற்கு நாம் சாக்குப்போக்கு கூறமுடியாது. நம் பாவங்களை நாம் மறைக்க முடியாது. நியாயத்தீர்ப்பு நாளில் எல்லாப் பாவங்களும் வெளிச்சத்திற்கு வரும்.

தாவீதின் மனந்திரும்புதல்

தேவன் தாவீதின் பாவத்தைச் சுட்டிக்காட்டியபோது, மற்ற அரசர்களைப் போலல்லாது, தாவீது தன் பாவத்தை ஒத்துக்கொண்டு, அதை அறிக்கை யிட்டார். தாவீது தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு, பாவத்திற்காக மனம் வருந்தி, பாவமன்னிப்புக்காக ஜெபித்து, பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டார். தாவீது தன் பாவத்தை மறைக்கவோ, அதை சரியெனக் கூறவோ அல்லது எதிர்த்துப்பேசவோ இல்லை.

பாவமன்னிப்பின் நிச்சயத்தின் அடையாளங்கள் (2 சாமு.12:20)

1. அவர் எழுந்து குளித்தார்.
2. தலைக்கு எண்ணெய் பூசிக்கொண்டார்.
3. தன் உடைகளைக் களைந்து புதிய உடைகளை உடுத்தினார்.
4. பாவ நிவாரணபலி செலுத்த கர்த்தருடைய ஆலயத்திற்குப் போனார்.
5. முழு இருதயத்தோடும் கர்த்தரைத் தொழுதுகொண்டார்.
6. இரட்சிப்பின் சந்தோஷம் திரும்பப் பெற்றதினால் வீட்டிற்குத் திரும்பிப் போனார். உணவு கேட்டுச் சாப்பிட்டார்.

ஊழியர்கள் இதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்த ஏழு நாட்களில் என்ன நடந்தது? அறைவீட்டு ஜெபம் தாவீதுக்கும், கர்த்தருக்குமுள்ள இரகசியம். அந்த இரகசியம்தான் சங்கீதம் 51 (பாவ அறிக்கை ஜெபம்). தான் சிறுவயது முதல் கற்ற நியாயப்பிரமாணப் புத்தகத்தின் மூலம் தன்னை ஆராய தாவீதுக்கு ஒரு வாரம் தேவைப்பட்டது.

தாவீதின் பாவ மன்னிப்பின் ஜெபமாகிய சங்கீதம் 51இல் தாவீது அறிக்கையிட்டதை ஆராய்வோம் :

- 'தேவரீர் ஒருவருக்கே விரோதமாக பாவஞ்செய்தேன், உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்' – உரியாவுக்கும் பத்சேபாளுக்கும் எதிராக பாவஞ்செய்தபோதிலும் 'தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேன்' என்று தாவீது கூறினார்.
- பாவம் மனிதர்களைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் தேவனுக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கும். 'நான் பாவஞ்செய்தால் தேவன் வருந்துவார்' என்ற நடுக்கம் தாவீதுக்கு இருந்தது. இந்த நடுக்கம் நமக்குத் தேவை!
- உள்ளத்தில் உண்மையாயிருந்தால் பரிசுத்தத்தில் வளர முடியும், தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாகவும் மாறமுடியும்.
- 'தேவனே, ஆண்டவரே' என்று தாவீது அழைத்த விதம், ஆலயத்திற்கு உள்ளே போகாமல் அதன் வாசற்படியில் நின்று மார்பில் அடித்த ஆயக்காரனின் ஜெபமாகிய 'தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்' என்ற ஜெபத்தைப் போல் உள்ளது.
- 'என்பாவங்களை மன்னித்து என்னைக் கழுவியருளும்' என தாவீது வேண்டுகிறார் (வ.1,2,7). ஆனால் இப்போதோ இயேசுகிறிஸ்துவின் இரத்தம்

சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவா.1:7). தாவீதின் காலத்தில் பயன்படுத்திய ஈசோப்பு அல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தமே நம் பாவங்களைக் கழுவிவிடும்!

• 'உம்முடைய பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்' – பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதன் பாவஞ் செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் விலகிவிடுவார். உதாரணம் : சிம்சோன் (நியா.16:20), சவுல் (1 சாமு.16:14). இப்போது பாவம் செய்தால் பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுவார் (எபே.4:30). பரிசுத்த ஆவியானவர் எடுத்துக்கொள்ளப்படாமல் 'நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும், உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்' (சங்.51:10–12) என தாவீது வேண்டினார்.

• தான் செய்த பாவத்தை யாரும் செய்யக்கூடாது, முக்கியமாக ராஜாவாக, தலைவராக, போதகராக, பொறுப்பில் உள்ளவர்கள், முன் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்; அப்படிச் செய்தால் மனந்திரும்ப வேண்டும் என்று தாவீது விரும்பினார். ஆகவே 'ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்' (சங்.51:15) என தாவீது தான் செய்த பாவத்தை உதடுகளினால் அறிக்கை செய்தார்.

• தேவ உணர்த்துதலுக்கு நாம் உடனே செவி கொடுக்கவேண்டும்.

• "உன் மகன் சாவான்" என தேவன் கூறியபோது, தாவீது கடவுளிடம் உபவாசித்து ஜெபித்தார். இருப்பினும் ஏழு நாள் கழித்து அக்குழந்தை இறந்துவிட்டது. தண்டனையை தாவீது அனுபவித்தார் எனினும் தேவனின் மீதிருந்த தன் அன்பை தாவீது விடவில்லை. தேவன் மீதான தன் விசுவாசத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டார். தன் புதல்வனான சாலமோன் அரசாள்வதைப் பார்க்கும்வரை தாவீது வாழ்ந்தார். சாலொமோன் (ஜெடிடியா) என்றால் தேவனுக்குப் பிரியமானவன் என்று அர்த்தம்.

• நம் தவறுகளின் விளைவை அனுபவிக்கும்போது பொறுமையுடனும், தாழ்மையுடனும் இருக்க வேண்டும்.

• நாம் பாவத்தில் விழுந்து கடவுள் நம்மை உணர்த்தும்போது, யூதாஸ் காரியோத்தைப்போல குற்ற உணர்வு கொண்டு வாழ்வை முடித்துக் கொள்ளக்கூடாது. மாறாக மனந்திரும்பி, தாழ்மையுடன் அவரிடம் காத்திருக்கவேண்டும். ஏனெனில் சாம்பலிலிருந்து சிங்காரத்தை உருவாக்குபவர் கடவுள்; எல்லாப்பாவிக்கும் நம்பிக்கை தருபவர் கடவுள்.

இறுதியாக, கடவுள் நீதியும், இரக்கமும் கொண்டவர். அவர் ஒவ்வொரு பாவியையும் நேர்த்தியாக சரி செய்து, பரிசுத்தப்படுத்துகிறார். நம் உடல் பலவீனமாக இருக்கிறபடியால் நாம் எப்போதும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். அப்போது கடவுள், 'என் இருதயத்திற்கு ஏற்றவன்' என நம்மை அழைப்பார். அது தானே நம் ஒவ்வொருவரின் ஏக்கமும்!

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை?

2. நீங்கள் பாவம் செய்த பிறகு தேவன் எப்படி உங்களை உணர்த்துகிறார்? அதற்கு நீங்கள் எப்படி கீழ்ப்படிகிறீர்கள்? இன்னும் உங்கள் வாழ்க்கையில் பரிசுத்தமடைய நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன?

Dr.ஜெனிபின், தமிழக அரசில் குடும்ப நல மருத்துவராகப் பணிபுரிகிறார்.

இஸ்லாமியப் பின்னணியைச் சேர்ந்த N. தீமோத்தேயு, ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையில் கண் பரிசோதகராகப் பணிபுரிகிறார்.

சங்கீதம் 51

1 தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த
இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

2 என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற
என்னைச் சுத்திகரியும்.

3 என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம்
எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

4 தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது
கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்; நீர்
பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்
போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கை
யிடுகிறேன்.

5 இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய்
என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

6 இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்தக்
கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

7 நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான்
சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான்
உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

8 நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது
நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

9 என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து,
என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

10 தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்,
நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

8 தாவீதின் ஆலய அர்ப்பணிப்பு

M.கௌரி



தேவனுக்கு ஆலயம் கட்ட தாவீது வாஞ்சையாய் இருந்தது அவரது முக்கிய குணங்களில் ஒன்று. தேவ ஆலயத்தை சாலமோன் கட்டினார் எனினும், ஆலயம் கட்ட முனைந்தவர் தாவீது தான்! தாவீது தேவ ஆலயம் கட்ட எடுத்த முயற்சிகளையும், அதன் பின்னணியையும் நாம் காண்போம்:

தொழுகை இடங்கள்

ஆரம்ப நாட்களில் கற்களால் அல்லது மண்ணாலான பலிபீடங்களின் மீது மக்கள் பலவிதமான பலிகளைச் செலுத்திவந்தனர். பின்பு கர்த்தரின் கட்டளைப்படி 'ஆசரிப்புக் கூடாரம்' என்றழைக்கப்பட்ட தொழுகைக்கான ஒரு கூடாரத்தை மோசே உண்டாக்கினார். இஸ்ரவேலரின் பாலைவனப் பயணங்களின்போது சுமந்து செல்லப்பட்ட அக்கூடாரம் யோசுவாவின் காலத்தில் சீலோ என்ற இடத்தில் நிறுவப்பட்டது (யோசு.18:1). பின்பு கீரியாத்யாரீமிலே அபினதாபின் வீட்டில் அது வைக்கப்பட்டது. அதன்பிறகு ஆசாரிப்புக் கூடாரமும், சர்வாங்க தகனபலிபீடமும் கிபியோனின் மேட்டில் இருந்தன (1 நாளா.21:29). மேடைகளில் பலியிட்டுத் தூபங்காட்டும் வழக்கம் அப்போது இருந்தது (1 சாமு.9:12).

உடன்படிக்கைப் பெட்டி

கிபியா ஊரிலுள்ள அபினதாபின் வீட்டில் இருந்த கர்த்தருடைய உடன்படிக்கைப்பெட்டியை நாடு முழுமைக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படி தாவீது எருசலேமுக்குக் கொண்டு வந்தார். அரசருக்குரிய ஆடைகளைக் களைந்து ஆசாரியர் அணிய வேண்டிய சணல் நூல் ஏபோத்தைத் தாவீது அணிந்துகொண்டு, தான் அரசன் என்கிற கௌரவத்தை உதறித்தள்ளி விட்டு பலிகளைச் செலுத்தினார் (2 சாமு.6:14); மக்களையும் தன் வீட்டாரையும் ஆசீர்வதித்தார். அங்கு தன் மனைவியாகிய மீகாள் தன்னை அவமதித்ததைக்கூட பொருட்படுத்தாமல் தன்னை அர்ப்பணித்து ஆடிப் பாடி நடனமாடினார் (2 சாமு.6:21).

ஆலயம் கட்ட வாஞ்சை

கர்த்தர் தாவீதை ஆசீர்வதித்தார். அவருடைய எல்லா எதிரிகளிட மிருந்தும் அவரைக் காப்பாற்றி இளைப்பாறுதல் தந்தார். அப்போது தாவீது தன் உள்ளத்திலே 'நான் மட்டும் சுகமாக இருக்கும்போது தேவனுடைய பெட்டி, திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே' என்று வேதனை அடைந்தார். தேவனுக்கு ஆலயம் கட்ட வேண்டுமென்று அதுவரை நியாயாதிபதிகளோ, தீர்க்கதரிசிகளோ, அரசரோ, பிரபுக்களோ கூறவில்லை. ஆனாலும் தாவீது தேவனின்மீதுள்ள நேசத்தால் ஆலயம் கட்ட தீர்மானித்து விண்ணப்பம் செய்தார் (அப் 7:46).

தேவ ஆசீர்வாதம்

தாவீது தம்மை நேசித்ததை நன்கறிந்த கர்த்தர், "உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக உறுதிப்பட்டிருக்கும். உன் சிங்காசனம் நிலைபெற்றிருக்கும்" என்று தாவீதை ஆசீர்வதித்தார் (2 சாமு.7:16). கர்த்தருடைய ஆலயத்துக்கு இடத்தைத் தேர்ந்தெடுத்தவுடன் அதைக் கட்டுவதற்கான முன்னேற்பாடுகளைத் தாவீது செய்தார் (1 நாளா. 22:1–19).

ஆனால் தேவாலயத்தைக் கட்டுவதற்கு கர்த்தர் தன்னை அனுமதிக்க வில்லை என்று தாவீது பின்பு அறிந்தபோது, அதை மிகவும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார் (வ.8).

தாவீதின் தீர்மானம்

தான் விரும்பியதை, தேவன் வேறு யாரைக் கொண்டு செய்தாலும் அதற்கு உதவி செய்யவேண்டும் என்று தாவீது தன்னைத்தாழ்த்தி, ஆலயம் கட்ட சாலொமோனுக்குக் கட்டளை கொடுத்தார். கட்டளை கொடுத்தது மட்டுமின்றி, தனக்குச் சொந்தமான 3000 தாலந்து தங்கத்தையும், 7000 தாலந்து வெள்ளியையும் கொடுத்தார். தேவனுக்குக் கொடுப்பதில் அவர் முன்மாதிரியாக இருந்ததால் மற்றவர்களும் தாராளமாகக் கொடுத்தனர்.

லேவியர் பேர்பேராக எண்ணப்பட்டு, அவர்கள் வாசலைக் காக்கவும், கர்த்தரைத் துதிக்கவும் பணிக்கப்பட்டனர். ஆசாரியர்கள் 24 வகுப்பு களாகப் பிரிக்கப்பட்டு வேதத்தைப் போதிக்கவும், தீர்க்கதரிசனம் உரைக்கவும் ஏற்படுத்தப்பட்டனர்.

கர்த்தருக்கு ஓர் ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற திட்டத்தில் கர்த்தர் தனக்குக் கொடுத்த பொறுப்புகளை நிறைவேற்றி, தனக்குப்பின் கர்த்தருக்காக செய்யவேண்டியவற்றை ஏற்பாடு செய்து, திருப்தியுடன் தாவீது மரணமடைந்தார்.

ஆலயம் இல்லாத காலத்தில் தேவனுக்காக ஆலயம் கட்டும்படி தாவீது வாஞ்சைகொண்டு தன் குமாரனின் மூலம் அதை செயல்படுத்தினார். இன்று தேவன் நம்மில் எதை எதிர்பார்க்கிறார்? ஆம், அவருடைய ஆலயத்தைக்கட்டும்படிதான். நாம்தான் அவருடைய ஆலயம் (1 கொரி.3:16), நம்மை தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலமாய் கட்ட வேண்டியது நம்முடைய பொறுப்பு. தாவீதைப்போல தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்ய விரும்பும் நாம் நம்மில் தேவன் வாசமாயிருக்க முயற்சிகள் எடுப்போம்; பிறருக்கும் உதவுவோம் (2 கொரி. 10:8, 13:10).

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் எவை?

2. தேவன் உங்களில் தங்கியிருக்க நீங்கள் என்ன செய்யவேண்டும்?

கௌரி பள்ளி ஆசிரியையாகப் பணி புரிகிறார். இவரது கணவர் சந்திரசேகர், ஒட்டன்சத்திரம் கிறிஸ்தவ ஐக்கிய மருத்துவமனையின் அலுவலகத்தில் பணிபுரிகிறார்.

என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்? (சங்.22:1).

9 தாவீது - ஓர் தீர்க்கதரிசி

D.அலெக்ஸாண்டர்

தாவீது எழுதிய 75 சங்கீதங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் ஏராளம். இந்த சங்கீதங்களை நம் தனிப்பட்ட வாழ்விலும், சபைகளிலும், ஜெபத்திலும், ஆராதனையிலும் நாம் உபயோகப்படுத்துகிறோம். இந்த சங்கீதங்களில் சில கிறிஸ்துவைப் பிரதிபலிப்பதாக உள்ளன. கிறிஸ்து பிறப்பிற்குச் சுமார் 1000 வருடங்களுக்கு முன் இவை எழுதப்பட்டிருந்தாலும், இவற்றில் கிறிஸ்துவின் பாடுகளையும், இயேசுவின் விரோதிகள் பற்றியும் அவரின் வாழ்க்கையையும் தீர்க்கதரிசனமாக தாவீது எழுதியுள்ளார்.

தாவீது எழுதிய 12 சங்கீதங்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றி உள்ளன. அதில் சுமார் 20 வசனங்கள் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளன. இவ்வசனங்களில் உள்ள அதிசயம் என்னவெனில் தாவீதின் பாடுகள் கிறிஸ்துவின் பாடுகளுக்கு ஒத்து உள்ளன. மேலும் தாவீதின் வாழ்க்கை இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கைக்கு நிழலாட்டமாய் அமைந்துள்ளது.

கிறிஸ்துவின் பாடுகள்

தாவீதின் பாடுகள் இயேசுகிறிஸ்துவின் பாடுகளின் முன்னறிவிப்பாக உள்ளன. அவற்றில் சில:

தாவீது தன் வேதனையைப்பற்றிக் கூறும்போது, "என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக் கொடுத்தார்கள்" என எழுதுகிறார் (சங்.69:21). இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கும்போது "கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்" (மத்.27:34).

தாவீது தன் நெருக்கத்தில் பாடின 22ஆம் சங்கீதத்திலும் "என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?" எனக்கதறுகிறார். இதே கூக்குரல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உதடுகளிலிருந்தும், "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்!"

என வந்தது (மத் 27:46; மாற் 15:34).

பாடுகள் இன்றிப் பரலோகம் இல்லை!
பாடுகளின்றிப் பரமனை தரிசிக்க இயலாது!

இயேசுவின் விரோதிகள்

தாவீதின் எதிரிகளுக்கும், கிறிஸ்துவின் எதிரிகளுக்கும் அதிக ஒற்றுமைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றை நாம் பார்க்கலாம்:

தாவீது தன் எதிரியைப்பற்றிக் கூறும்போது, "என்னுடைய உயிர் நண்பனும் என்னுடன் சாப்பிட்டவனும் எனக்கு எதிராக வந்தான்" (சங்.41:9) எனக் கூறுகிறார். இதே போல் இயேசுகிறிஸ்துவும், தான் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முன், "என்னுடனே அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்" என யூதாஸ்காரியோத்தைப் பற்றிக் கூறினார் (யோவா.13:18).

தாவீது தன் நியாயத்திற்காக தேவனிடத்தில் முறையிடும்போது தன் எதிரிகளைப் பற்றிக் "கொடுமையான சாட்சிகள் எழும்பி, நான் அறியாததை என்னிடத்தில் கேட்கிறார்கள். வீணாய், முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறார்கள்" (சங்.35:11,19) என்றார். இதைப்போல இயேசுகிறிஸ்துவுக்கு விரோதமாக பல பொய்ச் சாட்சிகள் எழும்பினார்கள் (மாற்கு 14:56–58). இயேசு, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படி இப்படியாயிற்று" எனக் கூறுகிறார் (யோவா.15:25).

தாவீதை எதிரிகள் பகைத்தது மட்டுமின்றி, பரியாசம் பண்ணினார்கள், சவால்விட்டார்கள், துன்பப்படுத்தினார்கள் (சங்.22:7,8,16,18). இயேசு கிறிஸ்துவின் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள் (யோவான் 19:34,37), அவருடைய உடையின் மேல் சீட்டுப் போட்டு பங்கிட்டார்கள் (மத்.27:35).

கிறிஸ்துவின் வாழ்க்கை

தாவீதின் சங்கீதங்கள், இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கின்றன. அவற்றில் சிலவற்றை கீழே காணலாம்:

தேவன் தாவீதைப் பார்த்தும், இயேசு கிறிஸ்துவைப் பார்த்தும் "நீர் என்னுடைய குமாரன்; இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன்" (சங்.2:7;

மத்.3:17; எபி.1:5; 5:5) எனக் கூறுகிறார். இருவரும் தேவனுடைய நேச குமாரர்கள்.

தாவீது தன்னைத் தாழ்த்தி "மனுஷனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும், அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்" எனக்கூறுகிறார் (சங்.8:6). இதையே எபிரெய ஆசிரியர் "சகலத்தையும் கிறிஸ்துவுக்கு தேவன் கீழ்ப்படுத்தினார்" எனக்கூறுகிறார் (எபி.2:6–9).

தாவீது தேவன் மேல் நம்பிக்கை வைத்து "நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காண வொட்டீர்" எனக் கூறுகிறார் (சங்.16:10). இதே வசனத்தை பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்த அனைவரையும் பார்த்து, "இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து கூறியுள்ளது" எனக் கூறி தாவீதைத் தீர்க்கதரிசி என அறிக்கையிடுகிறார் (அப்.2:31). தாவீது உண்மையிலேயே ஒரு தீர்க்கதரிசிதான்! தாவீது தனக்கு துன்பங்கள் வந்தபோது தன் எலும்புகள் முறிக்கப்படுவதில்லை எனக்கூறினார் (சங்.34:20). இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையில் அவருக்குப் பாடுகள் வந்த போது அவருடைய எலும்புகள் முறிக்கப்படவில்லை. தாவீது தன்னைப் பற்றிக் கூறியது எப்படி இயேசு கிறிஸ்துவிற்குப் பொருந்துகிறது என நினைக்கும்போது நாம் தாவீதின் தீர்க்கதரிசன வரத்தை அறிந்து கொள்ளலாம்.

இயேசு கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறுவதையும், மனிதர்களுக்கு வரங்களைத் தருவதையும் 1000 வருடங்களுக்கு முன்பே தாவீது எழுதுகிறார் (சங்.68:18). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் அவருடைய ஐந்து விதமான வரங்களையும் பவுல் தன் நிருபத்தில் விளக்கி எழுதி யுள்ளார் (எபே.4:8–13).

இது மட்டுமின்றி தாவீது, "என் வாழ்க்கை தேவனுடைய புஸ்தகச்சுருளில் எழுதியுள்ளது" (சங்.40:7) எனக்கூறுகிறார். இதையே எபிரெய ஆசிரியர் இயேசுகிறிஸ்துவின் பலியைப்பற்றி எழுதும்போது 'புஸ்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" (எபி.10:7) என தாவீதின் சங்கீதத்தை மேற்கோள் காட்டுகிறார்.

தாவீதின் சங்கீதம்	புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுதல்
2:7	மத் 3:17; எபி 1:5; 5:5
8:6	எபி 2:8
16:10	அப் 2:31
22:1	மத் 27:46
22:7,8	லூக் 23:35
22:16	யோவான் 20:25,27
22:18	மத் 27:35,36
34:20	யோவான் 19:36
35:11	மாற்கு 14:57–58
35:19	யோவான் 15:25
40:7,8	எபி 10:7
41:9	யோ 13:8; லூக் 22:47
68:18	எபே 4:8–13
69:21	மத் 27:34
109:4	லூக் 23:34
109:8	அப் 1:20
110:1	மத் 22:44
110:4	எபி 5:6

இதன் மூலம் நாம் தாவீதிற்கு இருந்த தீர்க்கதரிசன அறிவை அறிந்து கொள்கிறோம். மேலும் இயேசுகிறிஸ்துவைப் போல, தாவீதைப்போல பாடுபடுவது எவ்வளவு இன்றியமையாதது என நாம் தெரிந்துகொள்ளலாம். தாவீதின் அடிச்சுவட்டை, இயேசுகிறிஸ்துவின் முன் மாதிரியைப் பின்பற்றும்

போது தேவன் நம்மைப்பார்த்தும் "இவர் என் நேச குமாரன்" எனச் சொல்லும் வார்த்தைகள் வெகு தூரத்தில் இல்லை!

தாவீதின் சங்கீதங்கள் - ஓர் ஆய்வு

- கிறிஸ்துவைப் பற்றிய சங்கீதங்கள் – 2,8,16,21,22,23,40,41,45, 68,69,109,110
- தாவீதின் மலையேற்ற சங்கீதங்கள் – 122,124,131,133
- தாவீது சவுலுக்கு தப்பி ஓடிப்போகையில் பாடின சங்கீதங்கள் – 34,52,54,56,57,59,63
- தாவீதின் ஜெப சங்கீதங்கள் – 17,86,141,142
- தாவீதின் போதக சங்கீதங்கள் – 32,37,53,60
- தேவனைத் துதிக்கும் சங்கீதங்கள் – 9,18,19,24, 27,29,30,65,103, 138,139,145
- நம்பிக்கையின் சங்கீதங்கள் – 11,20,61
- பாவமன்னிப்பின் சங்கீதங்கள் – 6,38,51,143
- நீதி, நியாயம், நீதிமான், துன்மார்க்கனைக் குறித்த சங்கீதங்கள் – 7,14,15,36,39,58,101

- துக்கமான ஆத்துமாவின் சங்கீதங்கள் – 3,4,5,12,13,25,26,28,31, 35,55,62,64,70,108,140,144

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. உங்களுடைய வாழ்க்கையும் தேவனுடைய புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளதா ? என்னென்ன காரியங்கள் எழுதப்பட்டுள்ளன ?

10

தாவீதின் நன்றி மறவாமை

A.நிஷா ஜெபமலர்

தாவீதிடம் பொறுமை, பாவத்தை அறிக்கையிடுதல், தாழ்மை, விசுவாசம், அன்பு, கீழ்ப்படிதல், நன்றி செலுத்துதல் போன்ற பல நற்குணங்கள் காணப்பட்டன. இந்த எல்லாக் குணங்களிலும் மிகவும் முக்கியமான குணம் தாவீதின் நன்றி மறவாமை. இதைத்தான் தேவன் நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்.

இயேசு பத்துக் குஷ்டரோகிகளைக் குணப்படுத்தினார். ஆனால் ஒருவன் மட்டுமே திரும்ப வந்து தேவனுக்கு நன்றி கூறினான் (லூக்கா 17:11–19). இயேசுவும் அவனிடம், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" எனக் கூறி அவனது நன்றி மறவாமையை அங்கீகரித்தார். எனவே நன்றி மறவாமை நம்மிடம் காணப்படவேண்டிய இன்றியமையாத குணம். இங்கு நாம் தாவீதின் நன்றி மறவாமை குறித்துக் காண்போம்:

பொருத்தனைகள் தேவையா?

தேவாலயம் கட்ட பலவற்றையும் தாராளமாய்க் கொடுத்த பின் தாவீது "இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி எனக்கு உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்" என்று கூறினார் (1 நாளா.29:14). தாவீது தன் தேவனுக்கு வேறு எதுவும் செய்ய இயலாது என அறிந்திருந்தார். சகலமும் தேவனிடமிருந்து வந்ததுதான்; தம்மால் எதையும் புதிதாக உண்டாக்கி தேவனுக்குக் கொடுக்கமுடியாது எனவும் உணர்ந்திருந்தார். இந்த அறிவு, தாழ்மை மிகவும் முக்கியம். இப்படிப்பட்ட எண்ணம் இருந்தால்தான் நன்றி மறவாமை நமக்குள் வரும். நம்மிடமிருந்து தேவனுக்குத் தேவைப்படுபவை எதுவுமில்லை. தேவன் நம்மை அல்ல, நாமே அவரைச் சார்ந்து இருக்கிறோம். ஆகவே தேவனுடன் பேரம் பேசுகின்ற பொருத்தனைகளைத் தவிர்ப்போம்.

தாவீதின் பொருத்தனை

நமக்கு இப்போது சில கேள்விகள் எழலாம் – தாவீது தேவனுக்குப்

பொருத்தனை செய்திருந்தாரா? என்ன பொருத்தனை செய்திருந்தார்? தேவனுக்கு உகந்த பொருத்தனை எது? நாம் 56ஆம் சங்கீதத்தையும், 14ஆம் சங்கீதத்தையும் படித்தால் தாவீதின் பொருத்தனை எது? அதை அவர் எப்படி நிறைவேற்றினார் என அறியலாம்.

தாவீதின் பொருத்தனைகள் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதையும், தேவன் அவருக்கு செய்த நன்மைகளைப் பற்றிச் சாட்சி பகிர்வதையும் உள்ளடக்கியிருக்கின்றன (சங்.56). அக்காலத்தில் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துபவர் ஆலயத்தில் அதற்கான பலியைச் செலுத்தி தேவனுக்கு நன்றி கூறும் பாடல்களையும் பாடுவதோடு (சங்கீதம் 42:4, 69:30), தான் எதற்காக ஸ்தோத்திரபலி செலுத்துகிறான் என்பதையும் அங்கிருக்கும் மனிதருக்கு அறிவிப்பார்.

நெருக்கடி நேரத்தில் நன்றி

தாவீது நெருக்கடியான சூழ்நிலையிலும் தேவனைத் துதிக்கும் மனநிலையில் இருந்ததோடு, எருசலேமுக்குச் சென்று அங்குள்ள ஆலயத்தில் ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி அங்கிருக்கும் மக்களுக்கு தன்னுடைய வாழ்வில் செய்தவற்றை விவரித்துக் கூறும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்பினார். இத்தகைய நம்பிக்கையுடன் அவர் 56ஆம் சங்கீதத்தை நிறைவு செய்துள்ளார். "நான் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, நீர் என் ஆத்துமாவை மரணத்துக்கும் என் கால்களை இடறலுக்கும் தப்புவியாதிருப்பீரோ?" (சங். 56:13). முட்களுக்கு மத்தியில் இருக்கும் ரோஜா மலரைக் காயப்படாமல் செடியிலிருந்து பிடுங்குவதைப்போல ஆபத்துக்கள் மத்தியில் இருக்கும் தன்னை தேவன் அவ்விடத்திலிருந்து எடுத்து பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்வார் என்னும் நம்பிக்கையில் தாவீது நன்றி செலுத்தினார்.

உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் அதிக பயத்துடன் இருந்த தாவீது தேவனை நம்பியபோது, உள்ளத்திலிருந்த பயம் முழுமையாக நீங்கி, மனிதரால் தன்னை எதுவும் செய்ய முடியாது என்பதை அறிந்து தேவனை ஸ்தோத்தரிப்பவராக இருந்தார். தாவீதைப்போல நாமும், சகல சூழ்நிலைகளிலும் தேவன் நம்மோடு இருக்கின்றார் என்பதை அறிந்தவர்களாக எப்பொழுதும் அவரை நம்பி வாழவேண்டும். தேவன் மாறாதவராயிருக்கின்றார் (சங்.102:27). அவருடைய வார்த்தையும் ஒரு நாளும் மாறாது (சங். 119:89).

தாவீதின் ஸ்தோத்திரம்

ஸ்தோத்திரங்கள் செலுத்துவதுதான் தாவீது பண்ணின பொருத்தனை (சங்.56:12). பொதுவாக நாம் தேவன் செய்த காரியங்களுக்காக சில நாட்கள் அவரைத் துதிப்போம். ஆனால் தாவீது ஒரு நாளோ அல்லது ஒரு வாரமோ மட்டும் தேவனுக்கு நன்றி செலுத்தவில்லை. எப்பொழுதும், என்றென்றைக்கும், நாடோறும் (வாழ்நாள் முழுவதும்) தேவன் செய்த நன்மைகளை மறக்காமல் அவருக்கு நன்றி செலுத்துகிறார் (சங்.145:1–2). நாம் தாவீதிடம் கற்க வேண்டிய காரியங்களில் இதுவும் ஒன்று.

அதுமட்டுமல்ல, தாவீது தேவனைப்பற்றி நன்கு அறிந்து வைத்திருந்தார். எனவேதான் இந்த சங்கீதத்தில் தேவனுடைய நாமங்களையும், செயல்களையும் சொல்லி தன் நன்றி மறவாமையைக் காட்டுகிறார். தாவீது நினைவுகூர்ந்த தேவ பண்புகளைப் படிப்பது நமக்கும் நல்லது. நாமும் அவருடைய குணாதிசயங்களைச் சொல்லி அவரைத் துதிப்போம்.

- கர்த்தர் பெரியவர், புகழப்படத்தக்கவர் (வ 3)
- அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாதது (வ 3)
- கர்த்தர் இரக்கமும், நீடிய சாந்தமும், கிருபையும் உள்ளவர் (வ 8)
- அவர் ஆளுகை தலைமுறைக்கும் உள்ளது (வ 13)
- அவர் நீதியுள்ளவர் (வ 17)
- கர்த்தர் சமீபமாயிருக்கிறவர் (வ 18)
- கர்த்தர் இரட்சிக்கிறவர் (வ 19)
- கர்த்தர் காப்பாற்றுகிறவர் (வ 20)

தாவீது பாடிய ஸ்தோத்திர சங்கீதம் என சங்கீதம் 145 குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய மகத்துவத்தை நினைத்து அவரைப் போற்றுவது துதி என்றால், கர்த்தர் செய்த மகத்துவமான கிரியைகளை எண்ணி அவருக்கு நன்றிகளை ஏறெடுப்பது ஸ்தோத்திர ஜெபமாகும். கர்த்தர் விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார் (சங்.145:14). விழுந்துவிட்ட ஒருவனுக்குத்தான் தூக்கிவிடப்பட்டதன் அருமை தெரியும்; தூக்கிவிடப்பட வேண்டியதன் அவசியமும் புரியும். விழுகையிலிருந்து எழுந்து நிற்பதன் மகிழ்ச்சி எப்படிப்பட்டதென்பதும் அவனுக்குத் தான் புரியும்.

அதேபோல பாவத்திலிருந்து மீட்கப்பட்ட ஒருவனால் தான் மீட்பின் சந்தோஷத்தை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறமுடியும். இவ்வகையான எல்லாவித மேன்மையான அனுபவங்களையும் தாவீது உண்மையாகவே கடந்து வந்திருந்தார்.

தாவீது சந்தித்த சோதனைகளும், அவற்றிலிருந்து அவர் மீட்கப்பட்ட அனுபவங்களும், தொடர்ந்து அவர் பாடிய ஸ்தோத்திர கீதங்களும் உண்மையாகவே நமக்கு பெலனளிப்பதுடன் நம்பிக்கையும் அளிக்கிறது. தாவீது தன்னுடைய எல்லாச் சூழ்நிலையிலும் தேவனுக்கு நன்றி செலுத்தினான். ஆனால் நாமோ நம் கஷ்டநேரத்தில் நன்றி மறந்தவர்களாகக் காணப்படுகிறோம். தாவீதுபோல நாமும் எல்லாச் சூழ்நிலையிலும் தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்.

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும் (சங் 34:1).

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

2. நீங்கள் எப்படி தேவனுக்கு உங்களுடைய துதி, ஸ்தோத்திரங்களை செலுத்துகிறீர்கள் ? இதை எப்படி நீங்கள் அதிகப்படுத்தலாம் ?

A.நிஷா ஜெபமலர், ஒட்டன்சத்திரம் செவிலியர் பள்ளியில் பயின்று செவிலியராகப் பணிபுரிகிறார்.

11

தாவீதின் நட்பு

I.ரோஸ்லின் ஜான்ஸி

என் படிப்பு... என் பணம்... என் சொத்து... என் உறவு... என் பதவி... என்ற சுயநலமிக்க உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்மிருக்கிறோம். அதுமட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனும் தன் காரியங்களை மட்டும் சிந்தித்து வேகமாக ஒடிக்கொண்டே இருக்கிறான். அதிகமான நபர்களிடம் பழகுகிறோம், ஆனால் அன்பு கூர யாருமில்லை! இந்த 21ஆம் நூற்றாண்டில் பலர் நமக்கு உண்மையான நண்பர்களாக இல்லை. நாமும் மற்றவர்களுக்கு உண்மையான நண்பர்களாக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழும் நம்மை தாவீதின் நட்பு பாராட்டும் குணம் மெய்சிலிர்க்க வைக்கிறது. நாமும் ஏன் தாவீதைப் போல நம் நண்பர்களிடம் நட்பு கூரக்கூடாது என்ற கேள்வி எழுகிறது.

தாவீதின் உயிர் நண்பன் யோனத்தான். யோனத்தான் யார் என அறிந்தால் நாம் தாவீதின் அன்பின் ஆழத்தை அறிந்துகொள்ளலாம். யோனத்தான் தாவீதைக் கொல்ல முயன்ற சவுலின் மகன். அவனையே தாவீது நேசித்தார். தன் நண்பன் உயிர்வாழ்ந்த காலத்தில் மட்டுமல்ல, அவன் மரணமடைந்த பின்பும் அவனுடைய சந்ததிக்கும் நன்மை செய்தவர் தான் தாவீது. நாம் தாவீதைப்பற்றி அறிவோம், அவரைப் பின்பற்றுவோம்!

உயிர்நண்பர்களின் அடையாளம்

யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடு ஒருமனதாயிருந்தது. இருவரும் பல சமயங்களில் உடன்படிக்கை செய்துகொண்டனர். அந்த உடன்படிக்கையை நிறைவேற்ற முயன்றனர். யோனத்தான் தன் பொருட்கள் தன் நண்பனிடம் இருக்கவேண்டும் என எண்ணி, தன் சால்வை, வஸ்திரம், பட்டயம், வில், கச்சையை அடையாளமாகத் தாவீதுக்குக் கொடுத்தான் (1 சாமு.18:4).

யோனத்தான் தன் நண்பனுக்காகத் தன் தகப்பனிடம் பரிந்துபேசத் தயங்கவில்லை. அப்படியானால் தாவீது அவனுக்கு எவ்வளவு உண்மை

யுள்ளவராக இருந்திருப்பார்! (1 சாமு.19:1–7, 20:32). சவுல் தாவீதினிமித்தம் தன் தாயையும் இழிவாய்ப் பேசியபோது அது யோனத்தானுக்குப் பெரிதாய்த் தெரியவில்லை. தன் சிநேகிதனுடைய உயிர் அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தது (1 சாமு.20:30). நேசம் மரணத்தைக் காட்டிலும் வலிது அன்றோ ?

தாவீதும், யோனத்தானும் ஒருவரை ஒருவர் முத்தம் செய்தார்கள் (1 சாமு.20:41). தாவீது மிகவும் அழுதார். முத்தம், அழுதல் எல்லாம் சிநேகத்தின் மிகுதியினால்தானே! 'நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவா யிருப்பீர்' என்ற தன் சிநேகிதனுடைய நல்வார்த்தைகளைப் பெருமையின்றித் தாவீது ஏற்றுக்கொண்டார் (1 சாமு.23:17).

நண்பன் இறந்தபின்

தன் சிநேகிதனாகிய யோனத்தான் இறந்துவிட்டான் என தாவீது கேள்விப்பட்டவுடன் தன் உயிர் பிரிந்ததுபோல எண்ணி அழுதார். தன் சிநேகிதனை வர்ணித்து ஒரு புலம்பலைப் பாடினார் (2 சாமு.1:11, 17–27). பெண்களின் சிநேகத்தைப் பார்க்கிலும் யோனத்தானுடைய சிநேகத்தை தாவீது அதிகமாகக் கண்டார். அது வெகு இன்பமாயிருந்தது என்கிறார். தன் சிநேகிதன் மரித்த மலையையும் சபிக்க அவர் துணிந்தார். 'யோனத்தா னுடைய வில் பின்வாங்கினதில்லை' எனத் தாவீது பெருமையாய்ப் பாடினார். இவ்வாறாக நண்பன் இறந்தபிறகும் தாவீது யோனத்தானைப் புகழ்ந்தார்.

நம்பிக்கையின் நாயகன்

தாவீதின் பலம் அதிகரித்தபோதிலும், சவுலின் மகன் அரசாண்டபோது தாவீது அதைத் தடைசெய்யவில்லை. தன் நண்பனுடைய சந்ததி அழிக்கப் படுகிறதை அவரால் தாங்கமுடியவில்லை. யோனத்தானுடைய சந்ததிக்கு எதிரியாயிருக்கிறவர்களை அழிக்க அவர் முற்பட்டார் (2 சாமு. 4:8–12). தாவீது இராஜாவானபோது தன் சிநேகிதனையும், அவனுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் மறக்கவில்லை. யோனத்தானின் சந்ததியில் மீதியா யிருந்த அவனுடைய குமாரனாகிய மேவிபோசேத்தையும், வேலைக்கார னாகிய சீபாவையும் ஆதரித்தார் (2 சாமு.9:1–13).

அது மட்டுமன்றி, தாவீது அப்சலோமிற்குப் பயந்துபோகையில் யோனத் தானின் உறவினனான சீமேயி தாவீதைத் தூஷித்தபோது அவரைக் கொல்ல தாவீது தன் உடன் ஊழியர்களை அனுமதிக்கவில்லை. தன் சிநேகிதனுக்காக எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டார் (2 சாமு.16:5–10). தன் சிநேகிதரும், தன் தோழரும் தன் வாதையைக் கண்டு விலகியபோதும்

(சங்.38:11), தன் பிராணசிநேகிதனும், தான் நம்பினவனும், தன் அப்பம் புசித்தவனாகிய மனுஷனும், தன்மேல் அவனது குதிகாலைத் தூக்கிய போதும் (சங்.41:9) தாவீது அதைத் தாங்கிக்கொண்டார். தன் துன்பநேரத்தில் தன் சிநேகிதன் தன்னை விட்டுப் பிரிந்துபோனாலும் தன் சிநேகிதனுக்கு நிறைவேற்றுவேன் என்று கூறிய வார்த்தைகளை அவர் நிறைவேற்ற மறக்கவும் இல்லை, தயங்கவும் இல்லை.

நம் நிலை

தாவீதின் வாழ்க்கையோடு நம் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் அதிகம் மாற வேண்டியுள்ளது என அறியலாம். நம் சிநேகிதனுடைய ஆசையை நிறைவேற்றுகிறோமா ? நம்பிக்கை நாயகனாக இருக்கிறோமா ? நம்பிக்கை துரோகத்திலும் நம் சிநேகிதனை முற்றிலுமாய் சிநேகிக்கிறோமா ?

சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும் (நீதி.18:24). சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் (நீதி.17:17) என்ற இரு வசனங்களின் படியும் தாவீது வாழ்ந்தான் என்பது பெருமைக்குரியதே. நாம் தாவீதைப் போல உண்மையான, உயிரைப்போல சிநேகிக்கிற நல்ல நண்பனாக இருக்க விரும்புவோம் !

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை ?

3. உங்களுக்கு உயிர் நண்பர்கள் இருக்கிறார்களா ? நீங்கள் எப்படி அவர்களை சிநேகிக்கிறீர்கள் ? உங்களிடத்தில் என்ன குறை உள்ளது ?

---

1. ரோஸ்லின் ஜான்சன், ஒட்டன்சத்திரம் செவிலியர் பள்ளியில் பயின்று செவிலியராகப் பணிபுரிகிறார்.

12

தாவீதின் வாழ்வில் தேவ ஆளுகை

N.தீமோத்தேயு & D.அலெக்ஸாண்டர்

தாவீது தேவ இருதயத்துக்கு ஏற்றவனாக இருந்தார் (1 சாமு.16:18) என்றும், தன் காலத்தில் தேவனுடைய சித்தத்தின்படி செய்தார் (அப்.13:22,36) என்றும் நாம் வாசிக்கும்போது நாமும் தாவீதுபோல மாறவேண்டும் என்ற விருப்பம் நம்மில் மேலோங்குகிறது. அந்த எண்ணம் நல்லதுதான், தேவனுடைய ஆசையும் அதுதான்! தாவீதைப்போல நாம் மாறுவது எப்படி? தாவீது தேவ ஆளுகைக்கு, தன்னை முழுவதும் விட்டுக்கொடுத்தார். அவர் தனக்கென ஒரு விருப்பத்தையும் வைத்துக் கொள்ளவில்லை. ஆகவேதான் அவர் தேவனுக்குப் பிரியமானவனாக மாறினார். தாவீது தன் வாழ்க்கை முழுவதும் தேவ ஆளுகைக்கு எப்படி விட்டுக்கொடுத்தார் எனப் பார்ப்போமா?

தாவீதின் முன்னோர்

தாவீதின் மூதாதையரைப் பற்றி ரூத் புத்தகம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது. தாவீதின் தந்தை ஈசாய். ஈசாயின் தந்தை ஓபேத். ஓபேத்தின் தந்தை போவாஸ், ரூத்தின் கணவர் (ரூத் 4:17,22). தேவன் எப்படி ரூத்தை (தாவீதின் பாட்டியின் அம்மா) மோவாப் தேசத்திலிருந்து கொண்டு வந்தார் என நினைக்கும்போது நமக்கு ஆச்சரியம் மிளிர்கிறது.

போவாஸின் தாய் யார் என அறிந்தால் இதைவிட வியப்பாக இருக்கும். போவாஸின் தாய் ராகாப் என்ற வேசி (யோசுவா 2:1).



தாவீதின் வம்சவரலாற்றில் இரு பெண்களின் பெயர்கள் எழுதப்பட்டுள்ளன (மத்.1:5,6). இவ்விருவரும் புறஜாதியர். இவர்கள் இருவரின் பெயரும் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளன. இது தாவீதின் தெரிந்தெடுப்பு இல்லை. சர்வ வல்லவர் தனது சர்வ வல்ல ஞானத்தின்படி தாவீதை இந்த உலகத்திற்கு இவர்கள் மூலம் கொண்டு வந்தார்.

இவ்விரு பெண்களின் விசுவாசத்தைப் பார்க்கும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது. புறஜாதிப் பெண்ணான ராகாப், தேவ மனிதர்களை விசுவாசத்தினால் தன் வீட்டில் தங்க வைத்தாள். அது மட்டுமல்ல, அவள் வாயிலிருந்து கேட்போம் – தேவன் யார் என?

"உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசு.2:11). அவளுடைய செய்கையும் பேச்சும், சர்வ வல்லவருக்கே அவள் மேல் இரக்கத்தை உருவாக்கியதுபோலும்!

அடுத்த பெண்மணி ரூத்தோ மாமியாரைப் பார்த்து "உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" (ரூத் 1:16) என உறுதியாய்க் கூறி மாமியாரைப் பின்பற்றி தேவனைப் பின்பற்றிய போவாஸை மணந்தாள்.

இப்பாட்டிகளின் விசுவாசமும், தைரியமும், தேவன் மேல் இருந்த வாஞ்சையும்தான் தாவீதிற்குக் கடந்து வந்ததோ?

தாவீதின் குடும்பம்

தாவீது தன் வீட்டில் கடைசி மகனாய்ப் பிறந்தார். தீர்க்கதரிசியான சாமுவேல் தாவீதின் வீட்டிற்கு வந்தபோது தாவீது அங்கில்லை (1 சாமு.16:5–11). ஆனால் தாவீதின் மற்ற சகோதரர் அனைவரும் அங்கிருந்தனர். தாவீது கடைசி மகன் தானே, சிறுவன் தானே என தகப்பனும், அண்ணன்மாரும் அவனை அலட்சியம் செய்தார்களோ? தாவீது யுத்தகளத்திற்கு வந்தபோதும் அவனது சகோதரர்கள் தாவீதின் மேல் கோபம் கொண்டனர் (1 சாமு.17:28). கடைசி மகன் என்றால் எல்லாருக்கும் இளக்காரம்போலும்! யோசேப்பின் வாழ்க்கையிலும் அதுதான் நடந்தது.

ஆனால் தாவீதின் மனதில் தாழ்மையை உருவாக்க தேவன் அவரைக் கடைசி மகனாய்ப் பிறக்க வைத்தாரோ? மற்றவர்களின் அலட்சியம், கோபம், இளக்காரம் போன்றவை சிறு வயதிலிருந்தே தாவீதின் மனதில் ஒரு தாழ்மையை உருவாக்கியதோ? தேவனே அறிவார்!

அந்த வீட்டில் கடைசியாய்ப் பிறக்கவைத்தது தேவனின் அநாதித் தீர்மானம். தாவீதிற்கு இதில் எப்பங்கும் இல்லை. இதைப்போல நம்

வாழ்விலும் பல காரியங்கள் நம் கையில் இல்லை. நம் பெற்றோர், உடன் பிறந்தோர், சூழ்நிலைகள், உறவினர் அனைத்தையும் தேவன் தமது தீர்மானத்தின்படி நமக்கு அமைத்தார். எப்படி தாவீது இந்த விஷயங்களுக்காக தேவனைக் குறைகூறவோ, முறுமுறுக்கவோ இல்லையோ, அப்படியே நாமும் இருப்போம். குயவன் வனைவதை களிமண் புரிந்துகொள்ள முடியுமோ ? முடியாதே !

தாவீதின் மேய்ப்பன் வேலை

தாவீதின் வேலை வனாந்தரத்தில் ஆடுகளை மேய்ப்பது. வனாந்திரத்திலும், பாலைவனங்களிலும் கொடூர விலங்குகளின் மத்தியிலும் ஆடுகளை மேய்த்தார். ஏன் ஆண்டவர் இக்கடினமான வேலையை தாவீதிற்குக் கொடுத்தார் என நமக்குக் கேள்வி எழலாம். ஆனால் தாவீதோ அக்கடும் வெயிலில் ஆடுகளை மேய்த்துக்கொண்டே, "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்" என சங்கீதம் பாடினார். தேவனுடைய குணத்தை அறிந்துகொள்ளத்தான் தேவன் தாவீதை இக்கடினமான வேலைக்கு அனுப்பினாரோ ? தாவீது கல்லிலும், புல்லிலும் நடக்கவில்லையெனில் நமக்கு இந்த சங்கீதம் கிடைத்திருக்காதே ! அது மட்டுமல்ல, இயேசு கிறிஸ்துவும் அதை ஆமோதித்து "நானே நல்ல மேய்ப்பன்" (யோவா. 10:11) எனக் கூறுகிறார். இது நமக்கு நல்ல பாடமன்றோ ? தேவன் எந்தக் கடினமான வேலையைக் கொடுத்தாலும் நாம் தேவனுடைய குணத்தை அறிவோம், தாவீதைப் போலப் பாடல்கள் பாடுவோம். யாருக்குத் தெரியும் – பல ஆயிரங்களுக்கு நம் பாடல்கள் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரலாம் !

பாடுவோம் பாடல்களை
பாடுவோம் பரமனை !

அது மட்டுமா ? தன் வேலையில் தாவீது உண்மையும் உத்தமமாயும் இருந்தார். தன் உயிரையும் துச்சமாய் மதித்துக் கரடியையும், சிங்கத்தையும் கொன்று ஆட்டைக் காப்பாற்றித் தன் வேலையில் வைராக்கியமாய்த் திகழ்ந்தார் (1 சாமு.17:34–36). தாவீதின் இத்தைரியம் தான் கோலியாத்தைக் கொல்ல துணை நின்றது. இந்த உண்மைதான் அரசர் சவுலுக்கு முன்பாக அவரை நிற்க வைத்தது.

இயேசு கிறிஸ்து "நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" (யோவான் 10:11) எனக்கூறியது தன்னைப்பற்றியும், தாவீதைப் பற்றியும்தானோ !

தன் உயிரையும் மதிக்காத அஞ்சாநெஞ்சனை, தன் ஆடுகளின்

உயிரைப் பாதுகாக்கும் தீரனைக் கண்ட சர்வ வல்லவர் தன் மக்களை ஆள இவரே சரியானவர் எனத்தெரிந்துகொண்டாரோ ?

தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறவன் இராஜாக்களுக்கு முன்பாக நிற்பான் (நீதி.22:29) என்ற வார்த்தை தாவீதிற்கு எவ்வளவு சரியாய்ப் பொருந்துகிறது. நாமும் நம் வேலையில் உண்மையாய் இருக்க தாவீதின் வாழ்க்கை நம்மைத் தூண்டுகிறது அல்லவா ?

தாவீதின் ஆயுததாரி வேலை

தாவீது அடுத்ததாக சவுலின் படையில் ஆயுததாரியாக இருந்தார் (1 சாமு.16:21). ஆடுகளை மேய்த்தவன் இப்போது அரண்மனையில்! கோலும் தடியும் வைத்திருந்தவன் கையில் ஆயுதம். தனியாக காட்டில் சுற்றித் திரிந்தவன் இப்போது படைவீரர் நடுவில். எவ்வளவு மாற்றங்கள்! ஏகப்பட்ட புதுமை! இவை தாவீதின் வாழ்க்கையில் எப்படி நடந்தன ? இதுவும் குயவனின் வனைவுதான்!

தேவன் நம் வாழ்க்கையில் மாற்றங்களையும், புதிய சூழ்நிலைகளையும் அனுப்பலாம். அதை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்கிறோமா ?

ஆயுததாரி என்பவர் ஒரு கடைநிலை ஊழியர் போன்றவர் – மன்னனுக்குக் கீழே, படைத்தளபதிக்குக் கீழே, மற்றவர்கள் சொல்லும் வேலையைச் செய்கிறவன். இராஜாவாகப் போகின்ற தாவீது இப்போது சாதாரண படைவீரன்.

கர்த்தர் அவருடைய பிள்ளைகளைக் கீழ்நிலையில் வைத்துக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்துகிறார். தேவனுடைய கரத்தில் அடங்கியிருக்கும் போது ஏற்றகாலத்தில் அவர் உயர்த்துவார் என்பதே நமக்கும் கொடுக்கப் பட்ட கட்டளையோடு கூடிய வாக்குத்தத்தம்.

ஒவ்வொரு படியாய் ஏறினால்தான் மாடியை அடையமுடியும்; ஒவ்வொன் றிற்கும் அதற்கேற்ற காலம் உண்டு! தேவனுக்கு முன்பாக ஓடாதிருங்கள்.

தாவீதிற்கு எச்சரிக்கை

தேவன் தாவீதுக்கு கொஞ்சம் கொஞ்சமாய்ப் பயிற்சி அளிக்கிறார் எனப் பார்க்கும்போது நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. ராஜாவாகப் போகிற வருக்கு தேவன் அடுத்து ஒரு சிகப்பு விளக்கைக் காண்பிக்கிறார்; ஓர் எச்சரிக்கை நோட்டீஸை அனுப்புகிறார்.

தாவீது சவுலுக்கு முன்பாக கொண்டுவரப்படுகிறார். எப்பொழுதெல்லாம் சவுலின்மேல் தேவனால் அனுப்பப்பட்ட பொல்லாத ஆவி வருகின்றதோ,

அப்போதெல்லாம் தாவீது சுரமண்டலத்தை வாசித்து, சவுலுக்கு ஆறுதல் அளிப்பார் (1 சாமு.16:14–23).

இப்பொழுது கஷ்டப்படுகின்ற ஒரு மனிதனை, தேவனால் கைவிடப்பட்ட ஒரு மனிதனைத் தாவீது பார்க்கிறார். தேவனுக்குக் கீழ்ப்படியாத ராஜா அடைந்த வேதனைகளைப் பார்க்கிறார். இது தேவனே தாவீதிற்குக் காட்டு கின்ற ஒரு காட்சி எனக்கூறலாமா? 'ராஜாவாகப் போகின்ற நீ, இந்த ராஜாவைப் பார். தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவன் இப்போது அசுத்த ஆவி யினால் அலைக்கழிக்கப்படுவதைப் பார். பெருமை அடைந்ததால் பொல்லாத ஆவி பிடிக்கப்பட்டவனின் நிலையைப் பார்' என உணர்த்த தேவன் தாவீதைச் சவுலின் அரண்மனைக்கு அனுப்பினார் எனக்கொள்ளலாமா?

தாவீது சவுலைப்பார்த்து எச்சரிப்பைப் பெற்றுக்கொண்டார் என நாம் கொள்ளலாம். எனவே தான் தாழ்மையைக் குறித்து தாவீது அடிக்கடி தன் சங்கீதங்களில் கூறுகிறார் (சங்.51:17).

நமக்கும் இது ஓர் எச்சரிப்பாய் இருக்கட்டும். விழுந்துபோன விசுவாசி கள், ஊழியத்தை விட்டுப்போன ஊழியர்கள், பணஆசை பிடித்த தேவ பிள்ளைகள் நமக்கு ஒரு பாடமே!

'பெருமை தேவனுக்குப் பகை!
கீழ்ப்படியாதவன் தேவனுக்கு விரோதி!'

நமக்குள் எப்பொழுதும் இந்த எச்சரிக்கை விளக்கு எரியட்டும்!

தாவீதின் பாடுகள்

தேவன் அடுத்ததாக தாவீதை நடத்திய பாதை ஒரு பயங்கரமான, பயம் நிறைந்த, இருளான, எதிர்காலத்தைக்குறித்து நம்பிக்கையற்ற ஒரு பாதை.

தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டு அரண்மனைக்குள் சென்றுவிட்டார் (1 சாமு.16:1–23). எப்பொழுதும் ராஜாவுக்கு முன்பாக வேலை. அதுமட்டுமல்ல, கோலியாத்தைக் கொன்றவுடன் (1 சாமு.17), அந்நாட்டுப்பெண்கள் தாவீதைப் புகழ்ந்து பாடினர். தாவீதின் வாழ்க்கையில் எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டு இருந்தது. அடுத்து சிம்மாசனம்தான் என தாவீதின் மனம் எண்ணியிருக்கும். ஆனால் தேவனின் பார்வையில் தாவீதிற்கு இன்னுமொரு பயிற்சி தேவையாயிருந்தது – அது நீண்ட, பெரிய, கஷ்டமான பயிற்சி!

வந்தது வினை! சவுல் தாவீதின்மேல் பொறாமை கொண்டு (1 சாமு.18:8–9) தாவீதைக் கொல்ல வழி தேடினான். தாவீது சவுலுக்குப் பயந்து, தன் உயிருக்குப் பயந்து ஓட ஆரம்பித்தார்.

இப்பயணத்தில் தாவீது தன் மனைவியை இழந்தார், தன் சொந்த பந்தங்களை இழந்தார். உயிர் நண்பனின் அருகாமையை இழந்தார். என்ன கொடுமை! எந்த மனிதனையும் நம்பாமல், மனித ஆதரவு இல்லாமல் தாவீது தன்னை மட்டும் பற்றிக்கொள்ளவேண்டும், தன்னை மட்டும் நம்ப வேண்டும் என தேவன் எதிர் பார்த்தாரோ ?

அது மட்டுமல்ல, இப்பயணம், பாடுகள் எத்தனை நாட்களுக்கு என தாவீதிற்குத் தெரியாது. பயணம் மாதக்கணக்கில் தொடர்ந்தது. ஊர்விட்டு ஊர் சென்றார். ஏன், வேறு தேசத்திற்கே சென்றார். இரவில் கூட சரியான தூக்கம் இல்லை. சவுல் தன்னைக் கண்டுபிடித்துவிடுவாரோ என எப்பொழுதும் பயம். இந்நிலையில்லா வாழ்க்கையில்தான் தேவன் தாவீதை இன்னும் அழகான சிற்பமாய்ச் செதுக்கினார். தாவீதின் தாழ்மை, அன்பு, பொறுமை, மன்னிக்கும் குணம், தேவனைச் சார்ந்துக்கொள்ளுதல், விசுவாசம், நம்பிக்கை என என்னென்ன குணங்கள் தாவீதிடம் உள்ளதோ, அவை அனைத்தும் இப்பாடுகளின் பள்ளியில் கற்ற பாடங்கள்தான்!

சர்வ வல்ல கர்த்தர் இக்காடுகளில் தான் தன் கல்லூரியை வைத்திருந் தார்போலும்! மோசேக்கும் தேவன் வனாந்திரத்தில்தான் 40 வருடங்கள் பாடம் சொல்லிக் கொடுத்தார்.

தேவன் நடத்தி வந்த பாதை



நாம் தேவனின் அநாதித் தீர்மானத்தை, சித்தத்தை உணர்வோம். அவருக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

நம் வாழ்க்கையில் தேவ சித்தமே நடக்கட்டும். எல்லாம் நன்மைக்கே!

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை?

2. உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் தேவனுடைய அநாதி சித்தத்தை அறிந்ததுண்டா? நீங்கள் அறிந்துகொண்ட காரியங்கள் யாவை?

சங்கீதம் 139

1 கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.

2 என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்
திருக்கிறீர்; என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்.

3 நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என்
வழிகளெல்லாம் உமக்குத் தெரியும்.

4 என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே,
அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்.

5 முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை
என்மேல் வைக்கிறீர்.

6 இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத
உயரமுமாயிருக்கிறது.

7 உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய
சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?

8 நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான்
பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.

9 நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின்
கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,

10 அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப்
பிடிக்கும்.

11 இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி
வெளிச்சமாயிருக்கும்.

12 உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்
போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி.

13 நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின்
கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

14 நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத்
துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என்
ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.

15 நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே
விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு
மறைவாயிருக்கவில்லை.

16 என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில்
ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள்
உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது.

13

தாவீதின் தேவ அறிவு

D.அலெக்ஸாண்டர்

தாவீது எழுதிய ஒவ்வொரு சங்கீதமும், தேவனின் குணத்தையும் அவருடைய மகத்துவத்தையும் நமக்கு உணர்த்தும். இவற்றில் சங்கீதம் 139, சங்கீதங்களின் கிரீடம் என அழைக்கப்படுகிறது. நாம் அந்த சங்கீதத்திலிருந்து தாவீதின் தேவ அறிவையும், அவருக்கும் தேவனுக்கும் இருந்த உறவையும் அறிந்துக் கொள்ளமுடியும்.

தேவனின் மூன்று குணங்களாவன:

1. தேவன் சர்வ ஞானி – நம் தேவன் சகலத்தையும் அறிந்தவர். தனி மனிதனைப் பற்றியும், நாடுகளைப் பற்றியும் அறிந்தவர். அவர் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் அறிந்தவர்.
2. தேவன் சர்வ வியாபி – தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறவர், அவர் இல்லாத இடமே இல்லை!
3. தேவன் சர்வ வல்லவர் – தேவன் சகலத்தையும் உருவாக்க வல்லவர். அவரால் செய்யமுடியாத காரியம் எதுவும் இல்லை.

தேவனின் இம்மூன்று குணங்களை அறிந்த தாவீது, 'அந்த சர்வ ஞானிக்கு என்னைப்பற்றித் தெரியும், அந்த சர்வ வியாபி என்னுடன் இருக்கிறார், அந்த சர்வ வல்லவர் என்னை உருவாக்கினார்' என 139ஆம் சங்கீதத்தில் தேவனுக்கும் அவருக்கும் இருந்த உறவை விளக்கிக் கூறுகிறார். எனவே இந்த சங்கீதத்தில் தாவீது "என்", "என்னுடைய", "என்னை", "எனக்கு", "நான்" என தன்னைக் குறிக்கும் வார்த்தைகளை 24 வசனங்களில் 48 தடவை பயன்படுத்தி இருக்கிறார்.

எனவே நாமும் இந்த சங்கீதத்தைப் படித்து புரிந்துகொள்ளும்போது நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு பலப்படும்; நாமும் தேவனை "என் தேவன்" என உறுதியாய் உறவு கொண்டாடமுடியும்.

தேவன் சர்வ ஞானி - என்னை அறிவார் (வ 1-4)

"சர்வ வல்ல தேவன் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறார்" (வ.1) என தாவீது கூறுகிறார். இதன் மூல பதம் 'தேவன் என்னை முற்றிலுமாக, முழுமையாக, 100 சதவீதம் ஆராய்ந்து அறிந்து இருக்கிறார். என்னைப் பற்றி அவருக்குத் தெரியாதது எதுவும் இல்லை' எனக் கூறுகிறது.

தேவன் எவ்வாறு தன்னை அறிந்துள்ளார் என தாவீது மூன்று விதமாக விளக்குகிறார்:

முதலாவது, 'தேவன் தாவீதின் உட்காருதலையும் எழுந்திருக்கிற தலையும் அறிந்திருக்கிறார். இது மட்டுமன்றி, அவருடைய நினைவுகளை தூரத்திலிருந்து அறிந்திருக்கிறார்" (வ 2). தாவீதின் எல்லா வெளிப்புறமான செய்கைகளையும், உள்ளான நினைவுகளையும் தேவன் அறிந்திருக்கிறார். இந்த அறிவு எவ்வளவு ஆச்சரியமானது! மனிதர் நம் வெளிப்புற செய்கை களை மட்டும்தான் பார்ப்பார்கள். ஆனால் தேவனோ தூரத்திலிருந்தே நம் நினைவுகளை, சிந்தனைகளை, மன ஓட்டத்தை அறிந்திருக்கிறார்.

இரண்டாவதாக, தேவன் தாவீது நடப்பதையும் படுத்திருப்பதையும் (வ.3) அறிந்திருக்கிறார். ஆங்கில வேதாகமம் 'தேவனுக்கு என் அனுதின வாழ்க்கையும் தெரியும்' எனக் கூறுகிறது. அது மட்டுமல்ல, என் எதிர்கால வழியையும் தேவன் அறிந்திருக்கிறார். தேவனுக்கு எனது கடந்தகாலம், நிகழ்காலம் மட்டுமன்றி என்னுடைய எதிர்காலமும் தெரியும். எவ்வளவு அற்புதமான தேவன்! இந்த உண்மையை தாவீது உணர்ந்ததால்தான் எல்லாக் கஷ்டங்களிலும், கடினப்பாதைகளிலும் தேவனை நம்பி, சமாதானமாக இருக்க முடிந்தது. தேவனுக்கு நம்முடைய கடந்தகாலம், நிகழ்காலம், எதிர் காலம் எல்லாம் தெரியும் என நாமும் உணர்வோம், சமாதானம் நிறையும்!

மூன்றாவதாக, தேவன் தாவீதின் வாயின் வார்த்தைகளை, அவை வெளிவருவதற்கு முன்பே அறிந்துள்ளார் (வ.4). தேவன் நாம் வாயால் பேசும் வார்த்தைகளை மட்டுமின்றி, மனதில் பேசும் வார்த்தைகள், நம் மன ஓட்டங்கள், மனதின் எண்ணங்களையும் அறிந்திருக்கிறார். நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நம் பேச்சை மட்டும்தான் கேட்பார்கள். ஆனால் தேவன் தன் உள்ளான மனதின் யோசனைகளையும் அறிந்திருக்கிறார் என தாவீது அறிந்துகொண்டதை நாமும் தெரிந்துகொண்டால் நம் உள்ளான மனிதனிலும் பரிசுத்தத்தை வாஞ்சிப்போம்.

இந்த மூன்று வசனங்களிலிருந்து தாவீது கற்றுக்கொண்ட பாடங்கள் - தேவன் என் வெளிப்புறச் செய்கைகளையும், உட்புறச் சிந்தனைகளையும் அறிந்திருக்கிறார். தேவன் என் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அறிந்திருக்கிறார். தேவன் என் வாயின் வார்த்தைகளையும், என் இருதயத்தின் எண்ணங்களையும் அறிந்திருக்கிறார்.

இதை அறிந்த தாவீதின் பதில் என்ன? வ 23,24இல் தாவீது இவ்வாறாக ஜெபிக்கிறார்: "தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழிகள் என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்".

தேவனுக்கு தன்னைப் பற்றி முழுமையாகத் தெரியும் என அறிந்த தாவீது தன்னை இன்னும் ஒரு முறை தேவனிடம் அர்ப்பணித்து ஜெபித்தது போல, நாமும் 'தேவன் என்னை முற்றிலும் அறிந்திருக்கிறார், என் எண்ணத்தை, சிந்தனைகளை அறிந்திருக்கிறார்' என உணர்ந்து, 'என் இருதயத்தின் சிந்தனைகளை தூய்மைப்படுத்தும்' என தாவீதைப் போல ஜெபித்தால் தேவன் நம்மையும் நித்திய வழியிலே நடத்துவார்.

தேவன் சர்வவியாபி - தேவன் என்னுடன் இருக்கிறார் (வ 5-12)

பூமியிலும், வானத்திலும் வியாபித்திருக்கின்ற தேவன் தன்னுடன் கூடவே இருக்கிறார் என்ற உண்மையை தாவீது நன்கு அறிந்து வைத்திருந்தார். இதிலும் தாவீது முத்தான மூன்று சத்தியங்களை எடுத்துரைக்கிறார்:

முதலாவது, தேவன் தன்னைச் சுற்றிலும் இருக்கிறார் என தாவீது உணர்ந்திருந்தார் (வ 5). 'தேவன் என்னைச் சுற்றி அணைத்து இருக்கிறார். என்னுடைய எல்லாப் பக்கங்களிலும் தேவன் இருக்கிறார்' என்று தாவீது அறிந்துகொண்டார். அது மட்டுமின்றி, 'தேவனுடைய கரம் என் மேல் உள்ளது, தேவனுடைய கரம் என் தலையின்மேல் தான் உள்ளது' என உணர்ந்திருந்தார். ஆகவே தாவீது 'இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமாய் உள்ளது. இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை' என தன்னுடைய புரிந்துகொள்ள முடியாமையை இங்கு கூறுகிறார் (வ 6).

நாமும் இச்சத்தியத்தை அறிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! 'தேவ பிள்ளைகளைச் சுற்றிலும் தேவன் இருக்கிறார், நான் எங்கு சென்றாலும், உலகைப் படைத்த உன்னத தேவன் என்னைச் சுற்றி என்னை நெருக்கி இருக்கிறார். இதை விட முக்கியமாக, அவருடைய கரம் என் தலையின்மேல் உள்ளது' என உணரும்போது நம் உணர்வு, நம் உள்ளம் புத்துயிரடையும்!

இரண்டாவதாக, தேவன் தன்னுடன் எல்லா சூழ்நிலைகளிலும் இருக்கிறார் என தாவீது உணர்ந்தார். எனவே 'நான் தேவனுக்கு மறைவாக எங்கே போவேன் ? என கேள்வி கேட்டுவிட்டு (வ.7), அதற்கான பதிலையும் அவரே தருகிறார்: 'நான் வானத்திற்குப் போனாலும் தேவன் அங்கு இருக்கிறார். நான் பாதாளத்திற்குப் போனாலும் தேவன் அங்கேயும் இருக்கிறார்' (வ.18). நாம் நம்முடைய படிப்பில், வேலையில், பணத்தில் உயர்வை அடையும்போது தேவன் அங்கு நம்முடன் இருக்கிறார். அதைப் போல நாம் தோல்விகளைச் சந்திக்கும்போதும், நம் சோகத்திலும், துக்கத்திலும், தேவன் நம்முடன் இருக்கிறார் என நாம் உணர்ந்து கொள்வோம்.

மேலும் தாவீது சொல்கிறார்: நான் செட்டைகளை எடுத்துக்கொண்டு பறந்தாலும் தேவன் அங்கேயும் என்னுடன் இருக்கிறார். நான் உலகத்தின் ஓரத்தில் போய்த் தங்கினாலும் தேவன் என்னுடன் இருக்கிறார் (வ.9). இங்கு இரு சூழ்நிலைகளை நாம் பார்க்கலாம். சில சமயங்களில் நாம் ஓடிக்கொண்டே இருப்போம் – செட்டைகளை எடுத்துப் பறப்பதைப்போல. சில சமயம் அமைதியாக நம் வாழ்க்கை ஒரே இடத்திலேயே கழியும்.

தேவன் இச்சூழ்நிலைகளிலெல்லாம் தன்னுடன் இருக்கிறார், தன்னை நடத்துகிறார் என்பதைத் தாவீது உணர்ந்திருந்ததால் எல்லாச் சூழ்நிலை களிலும் தேவனை நம்பி, அவரைப் பின்பற்றி நடந்தார். எனவே தான் 'எல்லாச் சூழ்நிலைகளிலும் உமது கரம் என்னை நடத்தும். உமது கரம் என்னைப் பிடிக்கும்' என எழுதுகிறார் (வ.10). நாமும் தாவீதைப் போல தேவனை எல்லாச் சூழ்நிலையிலும் நம்புவோம், அவர் நம்மை நடத்துவார்!

மூன்றாவதாக, தேவன் எல்லா நேரங்களிலும் தன்னுடன் இருப்பதாக தாவீது அறிந்திருந்தார். மனிதனால் இரவில் பார்க்க முடியாது. ஆனால் தேவனால் இரவிலும் பார்க்க முடியும்! ஆகவே 'தேவன் என்னை இரவிலும் பார்க்கிறார், பகலிலும் பார்க்கிறார். எல்லா நேரத்திலும் என்னுடன் இருக்கிறார்' என தாவீது எழுதுகிறார் (வ.10,11).

இவ்வுணர்வு தாவீதை எவ்விதமான அர்ப்பணிப்பிற்கு அழைத்துச் சென்றது ?

'தேவன் என்னுடன் இருக்கிறார் என்ற உணர்வினால் நானும் தேவனுடன் மட்டும் இருக்கவேண்டும். தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்கள், பிரியமில்லாத மனிதர்கள் என்னுடன் இருக்கக்கூடாது' என தாவீது தீர்மானம் எடுத்தார். எனவேதான், "இரத்தப்பிரியரே, என்னை விட்டு

அகன்று போங்கள், உம்மைப் பகைக்கிறவர்களை நான் பகைப்பேன், உம்மை விரோதிக்கிறவர்களை நான் அருவருப்பேன்'' (வ.19,21) எனக் கூறுகிறார். 'இரவும் பகலும் தேவன் என்னுடன் இருக்கிறார்' என நாமும் உணர்ந்து தாவீதைப் போல் தீர்மானிப்போம். அப்போது தேவன் நம்முடன் நெருங்குவதை நாம் உணர்வோம்.

தேவன் சர்வவல்லவர் - என்னை உருவாக்கினார் (வ 13-16)

சகலத்தையும் செய்யவல்ல தேவன் தன்னை உருவாக்கினார் என்ற உண்மை தாவீதிற்குத் தெரிந்தது ஆச்சரியமே! விஞ்ஞானம் வளராத சூழ்நிலையில், மருத்துவ வசதிகள் மேம்படாத நிலையில் தாவீது இந்த சத்தியத்தின் ஆழத்தை நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார். தன்னை தேவன் எப்படி உருவாக்கினார் என நான்கு வசனங்களில் தாவீது தெளிவாகக் கூறுகிறார்:

முதலாவதாக, தேவன் தன் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக் கிறார் எனக்கூறுகிறார் (வ.13). ஆங்கில வேதாகமம் 'தேவன் என் உள்ளான உறுப்புகளை உருவாக்கினார்' எனக் கூறுகிறது. தாவீது அறிந்துகொண்ட முதலாவது உண்மை – தன் உள்ளான உறுப்புகளான இருதயம், நுரையீரல், குடல், சிறுநீரகம் போன்றவற்றை தேவன் உருவாக்கினார். மூலமொழியான எபிரேய மொழியில் இவ்வசனம் 'தேவன் என் உள்ளான மனிதனை உருவாக்கினார்' எனக் கூறுகிறது. உள்ளான மனிதன் என்பது நம் குணம், சுபாவம், திறமைகளைக் குறிக்கும். இதிலிருந்து தேவன் நம் குணாதிசயங் களை, சுபாவங்களை உருவாக்கினார் என அறிகிறோம். நாம் எப்படிப்பட்ட சுபாவங்கள் உள்ளவர்களாக இருந்தாலும் நம்மை உருவாக்கினவர் தேவனே!

இரண்டாவதாக தாவீது, 'என் தாயின் வயிற்றில் நீர் என்னைக் காப்பாற்றினீர்' எனக் கூறுகிறார் (வ.13). பெண்களின் வயிற்றில் உருவாகும் எல்லாக் கருக்களும் குழந்தையாகப் பிறப்பதில்லை. சுமார் 10 சதவீதக் கருக்கள் தாயின் வயிற்றிலேயே அழிந்துவிடுகின்றன. இதை அறிந்திருந்த தாவீது தேவனைப் பார்த்து, 'நீரே என்னை என் தாயின் வயிற்றில் காப்பாற்றி னீர், இல்லையெனில் நான் இந்த உலகத்திற்கே வந்திருக்கமாட்டேன்' எனக் கூறுகிறார். நமக்கும் இந்த உண்மை தெரியவேண்டும். நாம் இவ்வுலகத்தில் இருப்பது ஏதோ ஒரு விபத்தினால் அல்ல, தேவன் நினைத்ததால், விரும்பியதால், காப்பாற்றியதால் நாம் ஒவ்வொருவரும் இவ்வுலகத்தில் உள்ளோம்.

மூன்றாவதாக, தாவீது உணர்ந்துகொண்டது என்னவெனில் 'நான் அதிசயமாய், ஆச்சரியமாய் உருவாக்கப்பட்டேன்' (வ.14). நம்முடைய உடலை ஆராய்ந்து பார்த்தால் தாவீது கூறுவதில் உள்ள உண்மைகள் தெரியவரும். நம் உடம்பில் உள்ள தமனி, சிரைகளின் வேலைகள், இதயத்துடிப்பின் திறமை, மூளை தன் கட்டளைகளை நரம்பின் மூலம் செயல்படுத்தும் இரகசியம், நம் நுரையீரல்கள் காற்றை வெளியேற்றும் லாவகம் என நம்மால் புரிந்துகொள்ள முடியாதவை ஏராளம். இதை மனதில் கொண்டுதான் 'தேவனுடைய கரங்களால் விசித்திரமாய் நான் உருவாக்கப் பட்டேன்' எனக் கூறுகிறார் (வ.15). நாம் இதைப் புரிந்துகொண்டால் நம் தேவனை நம் உருவத்திற்காக, நிறத்திற்காக குறை கூறமாட்டோம்.

நான்காவதாக, தாவீது அறிந்துகொண்ட சத்தியம் நம் சிந்தனைக்கு எட்டாதது. தாவீது கூறுகிறார்: 'என் உடல் உறுப்புகள் ஒன்றும் உருவாவதற்கு முன்னே அவைகளைப் பற்றி உம்முடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறீர்' (வ.16). 'நம் உறுப்புகள் உண்டாவதற்கு முன்பே' என்றால் நாம், நம் தாயின் வயிற்றில் உருவான முதல் நாளிலேயே தேவனுடைய கண்கள் நம்மைக் கண்டன, நம் தாய் நம்மைப்பற்றி தெரிந்துகொள்வதற்கு முன்பே தேவன் நம்மைக் கண்டார், நம்மைப்பற்றி அவருடைய புத்தகத்தில் எழுதி வைத்தார் எனப்பொருள். என்னே மகிமை!

தாவீது அறிந்துகொண்ட இச்சத்தியங்களுக்கு தாவீதின் பதில் என்ன? வசனங்கள் 17,18 இதை விளக்குகின்றன: உமது ஆலோசனை களை, நீர் செய்த காரியங்களை எண்ணி அதிலே மகிழ்ந்திருப்பேன், உம்முடன் நேரம் செலவழிப்பேன் (வ.17,18).

'தேவனுக்கு என்னைப்பற்றி நன்றாகத் தெரியும், தேவன் என்னுடன் இருக்கிறார், தேவன் என்னை உருவாக்கினார்' என்ற மூன்று சத்தியங்களைப் புரிந்துகொண்ட நம்முடைய பதிலும் தாவீதின் பதிலைப் போலிருக்கட்டும். உள்ளான பரிசுத்தத்தைக்கூட்டி, வெளிப்புறமான செய்கைகளை மாற்றி, எப்பொழுதும் தேவனைத் துதித்து அவருடன் இருப்போம்!

நானும் என் தேவனும் (சங்கீதம் 139இன் சுருக்கம்)

1. தேவன் சர்வஞானி – என்னை அறிவார் (வ.1–4)

– என் செயல்களையும், சிந்தனைகளையும் அறிவார் (வ 2)

– என் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் அறிவார் (வ 3)

– என் வாயின் வார்த்தைகளையும், என் மனதின் எண்ணங்களையும் அறிவார் (வ 4)

என்னுடைய பதில் (வ.23–24)

– உள்ளான மனிதனில் பரிசுத்தம் வாஞ்சிப்பேன்.

2. தேவன் சர்வ வியாபி – என்னுடன் இருக்கிறார் (வ.5–12)

– என்னைச் சுற்றிலும் இருக்கிறார் (வ.5,6)

– எல்லாச் சூழ்நிலைகளிலும் இருக்கிறார் (வ.7–10)

– எல்லா நேரங்களிலும் இருக்கிறார் (வ.11,12)

என்னுடைய பதில் (வ.19–22)

– தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்யமாட்டேன்.

3. தேவன் சர்வ வல்லவர் – என்னை உருவாக்கினார் (வ.13,16)

– என் உள்ளான மனிதனை உருவாக்கினார் (வ.13)

– என்னைக் காப்பாற்றினார் (வ.13)

– என்னை அதிசயமாய் உருவாக்கியிருக்கிறார் (வ.14,15)

– என்னைப் பற்றி அவர் புத்தகத்தில் எழுதியுள்ளார் (வ.16)

என்னுடைய பதில் (வ.17,18)

– அவரை எண்ணி, துதித்து அவருடனே இருப்பேன்.

சுயபரிசோதனைக் கேள்விகள்:

1. இதிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்கள் யாவை?

2. உங்களுக்கும், தேவனுக்கும் உள்ள உறவில் நீங்கள் புதிதாகத் தெரிந்து கொண்ட உண்மை எது? அந்த உண்மைக்கு உங்களுடைய பதில் என்ன?

14

தாவீதின் பிள்ளை வளர்ப்பு

R. ஜார்ஜ் எபிநேசர்

இன்றைய பெற்றோர் சந்திக்கும் ஒரு பெரிய கேள்வி – தங்கள் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்பதுதான்...! கிறிஸ்தவப் பெற்றோரும் இதற்கு விதிவிலக்கல்ல. சொல்லப் போனால் கிறிஸ்தவப் பெற்றோருக்குத்தான் இவ்விஷயத்தில் கவலை அதிகம். பிள்ளைகளை எப்படி ஆண்டவருக்குள் நடத்தவேண்டும்? பிள்ளைகளுக்கு எப்படி கடவுளைக் குறித்து கற்றுக் கொடுக்கவேண்டும்? தாங்கள் எப்படி நல்ல பெற்றோராய் இருப்பது? என அவர்களின் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒவ்வொரு பெற்றோரின் வாழ்க்கையும் அவர்களது பிள்ளைகளுக்குப் பல பாடங்களைப் போதிக்கிறது. நல்ல மாதிரியாக வாழ்ந்து, சிறப்பான அறிவுரைகளைத் தரும் பெற்றோராகச் சிலர் திகழ்கின்றனர். தாவீது தன் பிள்ளைகளுக்கு எவ்வாறான தகப்பனாக இருந்தார்? தாவீது ஒரு தகப்பனாய் சாலொமோனுக்குக் கூறிய அறிவுரைகளையும், அப்சலோமுக்கு ஓர் அன்பு அப்பாவாய் இருந்ததையும் இங்கு நாம் காண்போம்:

சாலமோனுக்குக் கொடுத்த கட்டளைகள்

தாவீது மரணப்படுக்கையில் இருந்தபோது தன் மகன் சாலொமோனைத் தேவ கட்டளைகளில் உறுதியாக நிற்கும்படிக் கூறினார். தேவ கற்பனைகள், நியமங்கள், வழிகளில் வாழ்ந்தால் தேவனுடைய ஆசீர்வாதம் வரும் என வலியுறுத்தினார்.

தாவீதின் நோக்கமும், ஜெபமும், சாலொமோன் தேவனுக்காக வாழ வேண்டும் என்பதே! (1 நாளா.2:4–10). கடவுளின் குணநலன்கள் குறித்தும், தனக்குக் கடவுள் தந்த தனிப்பட்ட வாக்குறுதிகள் குறித்தும் தாவீது சாலொமோனுக்கு எடுத்துரைத்தார். தனிப்பட்ட முறையில் கடவுள் தன்னுடன் பேசியவற்றை சாலொமோனுடன் பகிர்ந்துகொண்ட தாவீதைத் தன் தகப்பனாய்ப் பெற்ற சாலொமோன் உண்மையிலேயே கொடுத்து வைத்தவன்தான்! தாவீது கூறியவை சாலமோனுக்கு ஒன்றும் புதிதல்ல;

அவைகளை சாலொமோன் பலமுறை கேட்டுள்ளார். இருப்பினும் இஸ்ர வேலை தேவ வழியில் உண்மையாக ஆள ஞாபகமூட்டுதல் அவசியமே!

எனவேதான், சாலமோன் நீதிமொழிகள் புத்தகத்தில் "உன் தகப்பன் புத்தியைக்கேள்" (நீதி.1:8,4:1,3,4) என அடிக்கடி கூறுகிறார். அது மட்டுமல்ல, தான் தன் தகப்பனிடம் கற்ற காரியங்களை தன் பிள்ளைகளுக்கு சாலொமோன் போதிக்கின்றார். அந்த போதனையே நீதிமொழிகள் புத்தகம். இப்பொழுதும் அந்த நீதிமொழிகளைக் கிறிஸ்தவர்கள் படித்து அதன்படி தம் பிள்ளைகளை வளர்க்கின்றனர். தாவீதின் மூலம் ஆண்டவர் இப்பொழுது உலகம் முழுவதும் உள்ள பெற்றோரையும், குழந்தைகளையும் ஆசீர்வதிக் கிறார். என்னே ஆண்டவரின் ஞானம்! ஒரு தந்தையின் போதனை – உலகம் முழுவதற்கும் ஆசீர்வாதம்!

சாலொமோனின் வாழ்க்கைக்கு தாவீதின் முன்னேற்பாடுகள்

எழுந்து கட்டு – இது தான் தேவாலயத்தைக் கட்டுவதில் தாவீது தந்த கட்டளை! தேவாலயத்தைக் கட்ட தேவன் சாலொமோனைத் தேர்ந்தெடுத் திருந்தாலும், சாலொமோன் அவ்வேலையை சரியாய்ச்செய்ய, தன் அதிகாரத்திலிருந்தவை அனைத்தையும் தாவீது செய்துமுடித்தார். விலை யுயர்ந்த பொன், வெள்ளி போன்றவற்றை தாவீது சேகரித்தார். ஆலயத்தைக் கட்ட திறமையான ஆட்களைத் தேர்ந்தெடுக்க தாவீது முயற்சியெடுத்தார். பின்பு "எழுந்துகட்டு, கர்த்தர் உன்னுடன் இருப்பாராக!" என சாலொமோனை ஊக்குவித்தார். சாலொமோனைக் குறித்த தனது எதிர்பார்ப்பையும் தாவீது சாலமோனிடம் ஒளிவுமறைவின்றிக் கூறினார்.

தன் தகப்பன் ஆரம்பித்த வேலையை, அவரது விருப்பத்தை சாலொமோன் நிறைவேற்றி ஓர் அருமையான ஆலயத்தைக் கட்டி முடித்தார். "நான் இந்த இடத்தை எனக்குப் பலியிடும் ஆலயமாகத் தெரிந்து கொண்டேன். இங்கு செய்யப்படும் ஜெபத்தை நான் கேட்பேன். என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்" (1 நாளா.7:12–16) எனக் கர்த்தர் அந்த ஆலயத்தை அங்கீகரித்தது எத்தனை மகிமையான காரியம்! தகப்பனின் முன்னேற்பாடுகள், மகனின் ஒத்துழைப்பு, தேவனின் அங்கீகாரம் – இதுவன்றோ இன்று நமக்குத் தேவை!

இந்த அருமையான தந்தையைக் கொண்ட அவருடைய பிள்ளைகள் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்தான். அதனால்தான் இயேசு கிறிஸ்துவும் அவருடைய வம்சத்தில் பிறந்தாரா ? இயேசுகிறிஸ்துவின் வம்ச அட்டவணையில் இயேசுவின் உலகப் பிரகாரமான தந்தை யோசேப்பு,

தாவீதின் பிள்ளையாக சாலமோன் வழியாக வந்தார் (மத்.1:6,7). இயேசுவின் தாயார் மரியாள், தாவீதின் இன்னொரு மகனாகிய நாத்தானின் (லூக்.3:31, 32) வம்சத்தில் வந்தார். தாவீதுக்கு இரண்டு மடங்கு மகிமை!



தாவீதின் வம்சத்தில் வந்தது மட்டுமல்ல, தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோது 'தாவீதின் குமாரனே' என அழைக்கப்பட்டார். (மத்.21:9,20:30, 22:41–45). நல்ல தகப்பனாய் இருந்ததற்கு தேவனே கொடுத்த நித்தியப்பரிசு அல்லவோ இது!

அப்சலோமை மன்னித்த தாவீது

பல நிகழ்வுகளின் மூலமாக தாவீதுக்கும், அப்சலோமுக்குமிடையே இருந்த அன்பு குறைந்தது. அவ்வுறவைச் சரிப்படுத்தமுடியாது எனும் அளவுக்கு இருவருக்கிடையே இருந்த இடைவெளி அதிகரித்தது. அரசனைக் காண அப்சலோம் விரும்புகிறான் என யோவாப் கூறியபோது, தாவீது அரசன் மறுத்திருக்கலாம்.

ஆனால் அப்சலோமின் செய்கைகளை மறந்து, அவன் தன்னிடம் வர அனுமதியளித்தார். பாவிகளையும், தன் எதிர்ப்பாளர்களையும் கடவுள் மன்னிப்பதைப்போல, தாவீதும் கடவுளின் மனதைப் பெற்றிருந்தார் (2 சாமு. 14:28–33).

அப்சலோமை நேசித்த தாவீது

அப்சலோம் தாவீதைக் கஷ்டப்படுத்தி, கவலைப்பட வைத்தபோதிலும் தாவீது தன் மகனை நேசித்தார். அப்சலோமுக்கும், தாவீதின் ஆட்களுக்கும் போர் மூண்டபோது, "அப்சலோமை என்பொருட்டு மெதுவாக நடப்பியுங்கள்" என தாவீது உத்தரவிட்டார். கலகக்காரனான தன் மகன் அப்சலோமை மிருதுவாய்க் கையாள்வதுதான் தாவீதின் வழக்கம்!

தன் மகன் மீதான தாவீதின் அன்பு மிகவும் ஆழமாயிருந்தது. அப்சலோம் இறந்தபோது தாவீது நடந்துகொண்ட விதத்திலிருந்து நாம் இதை அறியலாம். போர் முடிந்த பின் "அப்சலோம் நலமாயிருக்கிறானா ?" எனக் கேட்டார் தாவீது. அவன் இறந்துவிட்டான் என அறிந்து, "என் மகனே, நான் உனக்குப் பதிலாக இறந்திருந்தால் நலமாயிருக்கும்" என புலம்பினார்; மகாசத்தமாய் அலறினார் (2 சாமு.18:29–19:4).

பிள்ளைகளுக்காக தம் உயிரைத்தந்த இயேசுவின் அன்பை தாவீது வெளிப்படுத்துகிறார்.

அப்சலோமின் செயலால் தாவீது அழுதல்

தன் சகோதரியாகிய தாமாரை அவமானப் படுத்திய அம்னோனை, அப்சலோம் இரு வருடம் கழித்து பழி வாங்கினான். இதை யறிந்த தாவீது தன் உடைகளைக் கிழித்துக் கொண்டு தரையிலே விழுந்துகிடந்தார், மிகவும் புலம்பி அழுதார்.

அப்சலோம், அம்னோனைப் பழிதீர்த்த பின்பு கேசூருக்கு ஓடிப்போய் அங்கு மூன்று வருடங்கள் இருந்தான். தாவீது அவனைப் பழிக்குப் பழி வாங்கியிருக்கலாம்; ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் தேவனின் குணத்தை வெளிப்படுத்தினார் (2 சாமு.13).

நம் பிள்ளைகள் நமக்குக் கீழ்ப்படியாதபோதும், நம்மை எதிர்த்து நிற்கும்போதும், நம் உள்ளம் தாவீதைப்போல நம் பிள்ளைகள்மேல் கரிசனை கொள்ளட்டும். நம் பிள்ளைகளை எச்சூழ்நிலையிலும் விட்டுவிட வேண்டாம்.

அப்சலோமுக்காக சிங்காசனத்தையே விட்டுத்தருதல்

அப்சலோம் தனக்கு எதிராகக் கிளம்பிவிட்டான் எனத் தெரிந்ததும், தாவீது அவனுடன் போரிட விரும்பாமல், தன் சிங்காசனத்தையே அவனுக்காக விட்டுத்தந்தார்; அரண்மனையை விட்டு வெளியேறினார். தன் பதவி, அதிகாரம், செல்வங்களை தன் மகனுக்காக விட்டுக்கொடுத்தார்.

தாவீது –

தன் பதவியைவிட தன் மகனின் ஆசையே பெரிது என எண்ணினாரா ?

தன் சுகத்தைவிட தன் மகனின் சுகம் பெரியது என எண்ணினாரா ?

தான் ஒன்றுமில்லாமல் இருந்தாலும் பரவாயில்லை, தன் மகன் நன்றாக இருக்கட்டும் என எண்ணினாரா ? நமக்குத் தெரியவில்லை.

ஆனால் தன் மகனுக்காக தன்னை இழந்த, தன் பதவியைத் துறந்த, தன் ஆசை, விருப்பங்களை விட்டுக்கொடுத்த ஒரு தகப்பனின் தயாள குணமும், அன்பும் நம்மைச் சிந்திக்கவைக்கின்றன.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வன:

1. நம் பிள்ளைகள் எவ்வளவுதான் நம்மைப் புரிந்துகொள்ளாமல் இருந்தாலும், அவர்களை நாம் வெறுக்கக்கூடாது.
2. எச்சமயத்திலும் பழிக்குப்பழி வாங்கக்கூடாது.
3. நம் பிள்ளைகள் நமக்கு எவ்வளவுதான் தீங்கு செய்தாலும், நாம் அவர்களை மன்னிக்கவேண்டும்.
4. எச்சூழ்நிலையிலும் நாம் நம் பிள்ளைகள் மீது அன்பு கூரவேண்டும்.

நாமும் தாவீதுபோல, நல்ல தாயாய், தகப்பனாய் தேவ பிரமாணங்களை, ஆலோசனைகளை நம் பிள்ளைகளுக்குத் தொடர்ந்து சொல்லிக் கொடுப்போம். இதுவே நமக்கு நம் தேவனின் கட்டளை! (உபா.6:6–9). அதுமட்டுமல்ல, நம் பிள்ளைகள் நமக்குக் கீழ்ப்படியாதபோதும், நம்மை எதிர்த்து நிற்கும்போதும், நம் உள்ளம் தாவீதைப்போல நம் பிள்ளைகள் மேல் கரிசனை கொள்ளட்டும். நம் பிள்ளைகளை எச்சூழ்நிலையிலும் விட்டுவிட வேண்டாம். அப்படிச் செய்யும்போது நம் பிள்ளைகளும் தேவனுக்காக மகிமையான ஆலயம் கட்ட எழும்புவார்கள்!

தாவீதைப் பற்றி மேலும் அறிய...

- தாவீதின் முன்னோர் – ரூத் 4:17–22
- தாவீதின் உடன்பிறப்புகள் – 1 நாளா.2:13–17
- தாவீதின் குடும்பம் – 1 நாளா.3:1–9
- தாவீதின் அபிஷேகம் – 1 சாமு.16:1–13
- தாவீதும், கோலியாத்தும் – 1 சாமு.17
- தாவீதும், யோனத்தானும் – 1 சாமு.18,19,20.
- சவுலின் வெறுப்பு – 1 சாமு.18:6–19:1, 19:9–24
- சவுலுக்குப் பயந்து ஓடுதல் – 1 சாமு.21–28
- சவுலைக் காப்பாற்றுதல் – 1 சாமு.24, 26
- தாவீதும், அபிகாயிலும் – 1 சாமு.25
- அமலேக்கியரை முறியடித்தல் – 1 சாமு.30
- யூதாவின் மேல் இராஜாவாகுதல் – 2 சாமு.2:1–4
- இஸ்ரவேலின் மேல் இராஜாவாகுதல் – 2 சாமு.5:1–5, 1 நாளா.11:1–5
- தாவீதும் உடன்படிக்கைப் பெட்டியும் – 2 சாமு.6:1–23, 1 நாளா.13:1–14
- ஆலயம் கட்ட வாஞ்சையும் – 2 சாமு.7:1–29, 1 நாளா.17:1–15
- தாவீதின் பாவம் – 2 சாமு.11
- நாத்தானால் கடிந்துகொள்ளப்படுதல் – 2 சாமு.12
- குடும்பத்தில் குழப்பம் – 2 சாமு.13, 14, 15
- சீமேயி தூஷித்தல் – 2 சாமு.16:5–14
- தாவீதின் படைவீரர்கள்–2 சாமு.23, 1 நாளா.11:10–41
- ஆலயம் கட்ட ஆயத்தப்படுதல் – 1நாளா.22–26, 28, 29
- தாவீதின் பாவம் – 2 சாமு.24:1–17, 1 நாளா.21:1–17
- தாவீதின் இறப்பு – 1 ராஜா.2:1–12, 1 நாளா.29:26–28.

தேவனுக்குப் பிரியமானவர்
தாவீதின் தலையாய குணங்கள்

"தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன்"
(அப்.13:22)

உங்கள் கையில் தவழும் இந்நூல் பல தேவபிள்ளைகளின் முயற்சியால் உருவானது. தேவனின் இருதயத்திற்கு ஏற்றவராகத் திகழ்ந்த தாவீதின் 14 பண்புகளை இந்நூல் விளக்குகிறது.

இது ஒருமுறை மட்டும் வாசித்து வைக்கக்கூடிய நூல் அல்ல. எத்தனை முறை வாசிக்கிறீர்களோ, அந்த அளவு இந்நூல் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். இதை வாசிக்கும்போது வேதாகமத்தைத் திறந்துவைத்து, வசனங்களை வாசித்து தியானியுங்கள்.

ஒவ்வொரு அத்தியாயத்தின் கடைசியிலும் இரு கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் அக்கேள்விகளை உங்கள் தற்பரிசோதனைக்காக உபயோகிக்கலாம்.இப்புத்தகத்தை உங்கள் ஜெபக்குழுவின் வேத ஆராய்ச்சிக்காகவும் உபயோகப்படுத்தலாம்.வாரம் ஒருமுறை அல்லது மாதம் ஒரு முறை கூடும்போது, தாவீதின் ஒரு பண்பைஆராய்ச்சி செய்து கொடுக்கப்பட்டுள்ள.கேள்விகளை ஆராய்ச்சிக்காக உபயோகப்படுத்தலாம்.

இதில் எழுதப்படாத தாவீதின் மற்ற பண்புகளும் உண்டு. அவற்றை நீங்கள் அறிந்து உங்கள் வாழ்க்கையில் கையாண்டு தாவீதைப்போல நீங்களும் தேவனுடைய இருதயத்திற்குஏற்ற பிள்ளையாய் வாழ வாஞ்சிக்கிறோம்.

உங்கள் கருத்துகளை பகிர்ந்துகொள்ள

Dr. D. அலெக்சாண்டர், ஒட்டன் சத்திரம்,

மொபைல் எண் 94875 93968

Email : alex_hannah@kastanet.org

விலை : ரூ. 50.00

Published by

WORD OF CHRIST MINISTRIES

#100/3, Nirmala Apartments,
Medavakkam Tank Road, Kellys, Chennai - 600 010

ISBN 938432830-8